KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஆு மேமீ 16உ [No. 20.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 381
2. வறுமைப்பிணி—P. இராமாநுஜன் 383
3. அப்பர் — E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 385
4. கம்பராமாயணம் — T. N. சேஷாசலம் B.A., B.L. 387
5. மாறன் பாப் பாவினம் (K. நாராயண ரெட்டிகாரு அனுப்பிய பிரதி) 389
6. மரகதத் திளவரசன் (A Novel) — T. N. சேஷாசலம் B. A, B. L. 391
7. தமிழ்ப் பாடம் 393
8. வில்லி பாரத விளக்கம் — T. S. நடராஜ பிள்ளை B.A., B.L. 395
9 வர்த்தமானம் 399

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாயினும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி யில் அனுப்ப இயலாது.
மானேஜர்.

கலா நிலயம்

"பாரதி"

189055

செல்வம் கல்வி சுதந்தரம் உரிமை நாகரிகம் ஆசாரச் சீர்திருத்தங்கள், இவைகளால் அடையும் முன்னேற்றம், இவையனைத்திற்கும் ஒவ்வோர் வகையில் ஆதாரமா யிருக்கின்றதெனக் கருதப்படுகின்ற அரசியல் ஆட்சிமுறை, முதலியவைகளின் தன்மைகளைப் பற்றிக் கலாநிலயம் தான் கொண்டுள கருத்துக்களையும் நோக்கங்களையும் நேர்முகமாக உரைத்து வந்துளது. உலகத்தில் ஒருகூறு இவ்விந்திய நாடு. மன்பதைத் தொகுதியில் ஒருபாகமே இங்கிருக்கு மாந்தர். எப்பேரால் அழைத்திடினும் அப்பேரிற்கு 'ஆம்' என்னுமொரு பரம்பொருளை வணங்கி அதனடியிற் சேராரை எங்கெங்கும் வெந்துயரம் சேர்ந்து உழக்குவது திண்ணமாதலால், இக்கரைக்கு அக்கரைதான் பச்சை என நினைப்பது பார்வையின் குறையேயன்றி வளப்பத்தின் வேறுபாடன்று. உண்மையாதெனின், இம்மண்தலமுழுவதும் லோகாயத சமயநெறி தலைசிறக்கச் சார்வதாக, அந்நெறியைப் பின்பற்றி இவ்விந்திய தேயமும் போகின்றது. இப்போக்கினால் உலகத் துன்பத்தில் ஒருபகுதி இதற்கும் உரிமையாயிற்று. ஆதலின் இந்த நாட்டிற்கே இயன்றதெனும் ஓர் இயக்கம் இந்நாளிற் பொருள்பட நிற்கவில்லை.

மேனாடுகளும் மற்றுஞ்சில தேயங்களும் ஏதோ வோர்வித முன்னேற்ற மடைந்திருக்கின்றன வென்றெண்ணுவதும், இங்கிருப்பன சில அங்கு இன்மையாலும் இங்கு இல்லாதன சில அங்கு இருப்பதாலும் அம்முன்னேற்றம் எய்துவதாயிற்றென விவகரிப்பதும், இரண்டும் மாந்தர் உய்வதற்குரிய மார்க்கமன்றென்பது, கருத்தூன்றி ஆழ்ந்து ஆராயுங்காலையிற் புலப்படும். நசையிருக்கும் வரையில் நல்குரவு நீங்காதாதலின், ஈரிடத்தும் வறுமையுஞ் செல்வமும் ஒருபடித்தே. பற்றற வப்பரமபுருடனது நாமத்தைப் படிப்பதற்குக் கற்பதல்லால் மற்றெதுவும் கல்வியாகாதெனின், இருதிறத்திலும் அக்கல்வி நம்மிடத்துச் சிறிது மிகுந்தே இன்றைக்கும் இருக்கின்றனதென நினைப்பதே முறை. காமக் குரோதாதிகளிலிருந்து விடுபட்டு நிற்கின்றவோர் ஆன்மநிலையே சுதந்திரம் என்றுரைக்கத் தக்கதாம். பிறர்க்குச் சில நிரந்தர நன்மைகள்செய்ய இயல்வதே உரிமை. பெயக்கண்டும் நஞ்சுண் டமைவதன்றியே நாகரிகம் பிறிதில்லை. உலகத்தின் ஏனைய மக்களினும் இவ்விந்தியஜனங்கள் சீர்கெட்டுக் கிடக்கின்றனர் என்னுமிது உண்மையாகுமோ வென்னு மையம் எமக்குப் பெரிதுளது. மற்றதனை உண்மையெனக் கொண்டாலும், உண்ணின்று உண்டழிக்கும் புழுக்கள் நசிக்குமாறு புரியாமல், அவை அரிக்குமிடந்தோறும் தினவுமிகச் சொறிந்து கொடுத்தலால், விளையும் நலம் ஒன்றுங் காண்கிலேம்.

இதற்கிடையில் அப்புழுக்களோ உயிரளவு குடைந்து செல்லலாகின்றன. எனவே, திருத்த முயற்சிகளும் சட்டங்களும் தீமைக்கே காரணமாயமையாக் காலையிலும் நன்மைசில செய்யுமென நினைப்பது மரியதே. முன்னேற்றம் என்பது, மக்கள்கதி யெய்தினோரும் மாக்களாக மீள்வதின்றி, ஆன்மவளர்ச்சியின் முதிர்வினால் தெய்வத்தன்மையை எய்துகின்ற முயற்சியேயாம். செல்வமுங் கல்வியுஞ் சுதந்திரமும் உரிமையும் நாகரிகமும் சீர்திருத்தமும் முன்னேற்றமும் இவ்வண்ணம் அமைவதே உண்மையென எம்மோடு எண்ணுவோர், அவைகளை யெய்துதற்கு அரசியலமைப்புமுறைகளால் நல்கவல்ல உதவி யாதொன்றுமில்லையெனும் துணிபு பெற்றுத்தான் தீர்தல் வேண்டும். அது எதுவேயாயினு மாகுக. அவரவர் தம் வரையில் பொறையறிவு ஈதலாதி நற்குணங்களைக்கைக்கொண்டு மெய்வாழ்வு வாழ்வதற்குத் தலைப்படுவாராயின், எல்லாரு மொருங்கே யெங்கெங்கு மின்புற் றிருப்பவராவர். உயர்ந்த வாழ்விற்குரிய இந்நிரந்தர வாய்மைகள் நினைவிற்கலந்தூடாடுவதற்கு இடையூறாய்த்தோன்றிக் களைக்குமிவ் வரசிய லியக்கங்களிலும் அதனிற்குச் சார்பான மற்றுஞ் சில இயக்கங்களிலும் கவனத்தைச் செலுத்திவைப்பதால் நலமென்பதை நாடியவர்களாக மாட்டோம். நாம் குறித்தபடி சரதமாய நலந் திகழும் நல்வாழ்வு எய்துதற்குக் காவியமாதிய கலைகளின் பயிற்சியன்றி யயல்வழி கண்டிலம். தொல்லைநாள் நம் தேசம் சான்றோர் செறிந்த நாடாயிருந்ததற்குக் காரணம் அதுவே.

முதலிலிருந்து இதுவரையில் வந்துள எம் தலையங்கங்களின் தன்மையைத் தொகுத்துக் கூறினோம். இன்னன கொள்கைத்து இக்கலாநிலயம். இக்கொள்கை புதியதுமன்று, கலாநிலயத்தின் கற்பனையுமன்று. மேனாட்டிலும் நம் நாட்டிலும், தொன்றுதொட்டு இன்றுகாறும் பேரறிஞர் பற்பலர் விலக்கரிய இவ்வாய்மைகளைக் கூறிவந்துளர். அன்னார் உரைகளை மேற்கோள்களாய் அவ்வப்போது எடுத்துக் காட்டியுமிருக்கின்றோம். ஆயினும், இத்தகைய கருத்துக்களும் அக்கருத்துக்களுக்கேற்ற செய்கைகளும் வாய்ந்தவர் இவ்வுலகின்கண் தற்காலம் ஒருசிலரே இருக்கலாகின்றனர். ஆதலின், அன்னார் உரைகளைக் கருத்துட்கொண்டபேர்கள், இன்று நடைபெறும் உலகச் செய்திகளின் ஒரு புறத்தையே கண்டவ ராவர். அந்நல்லுரைதான் உண்மையற்றதென்றேனும், உய்யும்வழி அன்றேனும் வன்மையொடு அதனை விலக்குமாறு வெளிப்படையாய்ப் பேசுபவர் இந்நாள் சிற்சிலரே யெனினும், கருமத்தளவில் அவைகளுக்கு முகங்கொடாமல் எதிர்நோக்கி நடப்பவரும் நடத்துபவரும் மிகப்பெரும்பகுதியரா யிருக்கின்றனராதலால் அவர்களது உரையையும் நெறியையும் யாவரும் கருத்துட் கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். முழுமையாய் ஒன்றை உணர்தற்கு மற்றைப் புறத்தையும் நன்குநோக்கி மதித்தல் வேண்டும்.

அவ்வாறு மதிப்பதற்கு ஏற்ற கருவியாய்ப் 'பாரதி' என்னும் ஓர் தேசிய மாதப்பத்திரிகை, ஸ்ரீமான் ரா. நாராயணசாமி, அவர்களை ஆசிரியராகக்கொண்டு மதுரை ஜில்லா உத்தமபாளையத்தில் உதித்திருக்கின்றது. இப்பத்திரிகையின் இவ்வருடத்திய ஜனவரி, பிப்ரவரி மாதத்து இதழ்கள் இரண்டும் வரப்பெற்றோம். அவைகளோடு ஆசிரியர் விடுத்துள நிருபத்தில், "இதுகாறும் வெளிவந்துள தமிழ்ப்பத்திரிகைகள் எவையும் சென்றிராத வோர்நெறியில், தற்காலம் புதியதாய்க் கண்விழித்துள தேசீய உணர்ச்சிபற்றிச் செல்லும் பத்திரிகை இது" என வரைந்திருப்பது வாய்மையே என்பதற்கு ஐயமில்லை ஸ்ரீமான் நாராயணசாமி அவர்கள், "தேவாங்கமித்திரன்" என்னும் பத்திரிகை ஆசிரியராயிருந்திருக்கின்றார். இப்பொழுதும் "ஏலவிவசாயி" என்னும் பத்திரிகைக்கும் இவரே ஆசிரியர். சென்ற பலவாண்டுகளாகத் தேசீய இயக்கங்களின் முன்னணிநின்று அதனால் ஏற்படும் கஷ்டநஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கின்றார். இன்னவகை, அறிவும் அநுபவமும் அவைகளைச் செவ்வனே பயன் செய்வதற்குரிய ஆற்றலும், இவ்வறிவு அநுபவ ஆற்றலாதிகளைத் தன் தேசத்தின்பொருட்டு அர்ப்பணஞ் செய்யவேண்டு மென்ற ஆர்வமும் உடையவொருவர், "ஜபான் டர்க்கி அனைய தேசங்களைப் பின்பற்றித் தற்கால முறையில் நமது தாய்நாட்டிற்கோர் உயர்நிலை" எய்துவதில் ஈடுபடும் பத்திரிகை யொன்றிற்கு ஆசிரியராய் அமைவாராயின், அது அக்கருத்திற்கு இணங்கிய சிறப்போடு விளங்க வேண்டுமென்று ஊகிப்பது மாத்திரமல்லாது, இவ்விரு இதழ்களையும் ஓதினோர் யாவரும், விளங்குகின்றதென்றேயும் ஒருவாயாய்ப் புகன்று பாராட்டுவார்.

இன்ன நலங்களோடு தமிழ்மொழியில் தக்க பயிற்சியும் பெற்றுள ஆசிரியர், முன்னுளிந்தியப் பெருமைகளையும், இக்காலம் புக்கிருக்கும் தாழ்மையையும் உன்னியுன்னி, மேனாடுகள் எய்தியிருக்கின்ற முன்னேற்றத்தையும் வியந்து கொண்டாடுபவராய், அன்புடனும் ஆர்வத்துடனும் இன்று இந்நிலைக்குரிய நன்மையுந்தீமையும் நாடிச் சொல்ல முற்பட்டிருக்கின்றாரெனின், அவர்திறம் இக்கருமம் செய்யவல்லார் வேறுளர் மிகச்சிலரே என்று இயம்பவும் வேண்டுமோ. "பாரதி" முதல் இதழில், தெளிவாகவும் விரிவாகவும் வரைந்துள முகவுரை அவர் கொள்கையை மொழியுந் தன்மையில் எல்லோர்க்கும் நல்விருந்தாகும். முற்கால இந்தியாவையும் தற்கால இந்தியாவையும் ஒப்புநோக்கி, "சுதந்திர இந்தியா அடிமை இந்தியாவாகவும், செல்வ இந்தியா தரித்திர இந்தியாவாகவும், மணி இந்தியா பிணி இந்தியாவாகவும் மாறிவிட்டது" என நயமுறக் காட்டுகின்றனர். காட்டிப் பின் காங்கிரஸ் மகாசபை இந்நாள் பெற்றுள செல்வாக்கைச் செப்பிப் பிறநாடுகளின் பத்திரிகைப் பெருக்கத்தையும் இந்நாட்டில் குறைவையும் தெளிவுறக் கணக்கிட்டுக் கூறுகின்றனர். பின், ஜோஸப் மஸீனியின் கட்டுரையொன்றைத் தழுவித் தேசாபிமானத்தைப்பற்றி இவ்வாசிரியர் எழுதியுளர். இவைகளில் "கல்வி, தொழில் அபிவிர்த்தி, ஓட்டுரிமை" என்னும் முறையில் முன்னேற்றத்தின் கதி மிகவும் திறமையோடு வாதிக்கப் பெற்றிருக்கின்றது. கலைப்பயிற்சி—மெய்யுணர்வு—கடவுள்நிலை, என்றுரைக்குங் கலாநிலயம். உலகநடையில் பத்திரிகைகள் மிகவும் அவசியமானவை என வற்புறுத்துகின்றனர், "பாரதியின்" ஆசிரியர். அமெரிக்காவில் அப்பத்திரிகைகள் கணக்கிறந்தன யாவரும் ஆவலோடு படிக்கின்றதைப் பாராட்டுகின்றனர். அந்நாட்டிலும் மற்றைய நாடுகளிலும் "இவ்வாறு இவ்வளவு அதிகமாய்க் கிராமஜனங்களும் பத்திரிகைகளை வாங்கிப்படித்து உலகவிஷயங்களை யறிந்து வேகத்துடன் முன்னேறிக் கொண்

டிருக்கின்றார்கள்—நம் நாட்டிலோ!" எனப் பாரதியின் ஆசிரியர் இரங்குகின்றார். அவ் வமரிக்கர்களுக்குள்ளேயே இணையற்ற தத்துவ அறிஞர் எனப் போற்றப்படுகின்ற எமர்ஸன் என்பவரோ, "நாடோறும் நீ வர்த்தமானப் பத்திரிகைகளைப் படிப்பதில் செலவழிக்கின்ற காலத்தை, இலக்கியங்களைப் படிக்கும்பொருட்டு உபயோகித்தா லாகாதா!" என மன்றாடுவார். அபிப்பிராய பேதங்கள் எப்படியும் எப்பொழுதும் இருக்கும். தன்னுடைய அபிப்பிராயத்தை நாட்டினது நலத்தின்கண் நாட்டமோடு சுயநயசிந்தையின்றித் திறமையாயும் ஆர்வத்தோடும் விளம்புகின்ற வகையில் "பாரதியை" நாம் மிகமகிழ்ந்து நல்வரவு கூறுகின்றோம். அதற்கு வருட சந்தா இரண்டு ரூபாயே ஆதலால், பொருளீட்டும் நோக்கமுடைத்தன்று என்பது வெளிப்படை. நம் கலாநிலய வாசகர் அனைவரும் பாரதிக்குச் சந்தாதாரராக நாம் விரும்புவதுமாத்திர மல்லாது வேண்டியுங்கொள்கின்றோம்.

தேசாபிமானம், பாஷாபிமானம், சமயம், ஆசார சீர்திருத்தம், ஜீவிய சரித்திரம், விவசாயம், தொழில் வியாபாரம், கலைவளர்ச்சி யாதியாய இருபத்திரண்டு விடயங்களைத் தன்னுள் பெற்றிருக்கும் பாரதி. பண்டிதை அசலாம்பிகை அம்மாள், ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், திரு. R. P. சேதுப்பிள்ளை போன்ற அறிவாளிகள் பற்பலர் இதன்கண் கட்டுரைகள் வரைந்துவருவாரெனத் தெரிகின்றது. அக்கட்டுரைகளும் எவ்விதத்தனவா யிருக்குமென்பதை இவ்வாசிரியர், இரண்டாவது இதழில், "புஸ்தக ஆசிரியர்களுக்கு" என எழுதியிருக்குந் தலையங்கத்திலிருந்து நன்கு அனுமானிக்கலாம். எல்லாம் இவ்விந்திய தேசத்தின்பால் கொண்டவொரு ஆசையால் "வீராவேசம்" விளைவிக்கும் நோக்க முடையனவா யிருக்கும். எல்லாக் கட்டுரைகளும் அவ்வாறு இருக்கவும் இருக்கின்றன. "புத்தக ஆசிரியர்களுக்கு" என்ற தலையங்கமும், திரு. ஆதிமூர்த்தி, என்பவர் எழுதிய "வீரவாழ்வும் பாரத நாடும்" என்னும் கட்டுரையும், திரு. இ. சிவனார், நாடகத்தைப்பற்றி எழுதியிருப்பதும், திரு. மனோகரனார் எழுதிய 'தேசீய ஒற்றுமை' என்பதும் பிறவும் கல்லிற்குமோர் கிளர்ச்சிதரும் மொழிகளால் அழகிய தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. தேசீயவாழ்வின் பெருமையை எடுத்துக்காட்டி அதற்கு இந்நாட்டினர் ஆளாகுமாறு தட்டியெழுப்பும் பத்திரிகை 'பாரதியின்' திறம் நாம் இதுவரையிற் கண்டதில்லை. கலாநிலயம் ஆன்மவாழ்வின்நன்மையில் ஈடுபட்டிருக்கின்றது. எம்மோடு ஆன்மவாழ்வின் அதிசயங்களைக் காண்பவர், 'பாரதியின்' சார்பில் தேசீயவாழ்வின் வீராவேசத்தையும் கேட்டல் வேண்டும். மற்று ஆன்மவாழ்க்கையை முதலாகக் கருதாமல் பிறநாடுகளைப்போல் தேசீய வாழ்விலேயே ஈடுபட்டிருந்தால் சிற்சில சமயம் பேராவா அழுக்காறு முதலிய பாவங்களுக்கு நாம் அயர்ந்துபோய் ஆளாவதுங்கூடும். முன்னேற்றம் மிகுதியும் அடைந்துளவென்று இப்பாரதியின் ஆசிரியரால் வியந்து பாராட்டப்படுகின்ற "அமெரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா, கிரேட்பிரட்டன் முதலிய தேசங்கள், 1923 வருஷம் பூகம்பத்தால் ஜபானுக்கு உண்டானகணக்கற்றநஷ்டங்களைக்கண்டு, தங்களுக்கு வியாபாரத்துறையிலும் ராஜீய விஷயத்திலும் போட்டியாயிருக்கும் (ஜபான்) தேசம்—ஆசியாக்கண்டத்தில் பலம் பொருந்திய தேசம், இனித் தொலைந்ததென்று சந்தோஷப்பட்டன" என்பதை அவரே பின்னோரிடத்தில் எடுத்துக் காட்டுகின்றனர். அயலார் அழிவில் தன் ஆக்கம் நிலைக்க வேண்டுவது இன்றியமையாதெனின் அவ்வித முன்னேற்றத்தினின்று நம்மைக் காக்கும்படி கலாநிலயம் கடவுளுக்குக் கை கூப்புவது கடன்.

இப் பாரதிப் பத்திரிகைக்கு, வருடசந்தா, உள்நாட்டிற்கு ரூ. 2-0-0ம், வெளிநாடுகளுக்கு ரூ. 2-8-0, (அல்லது 4 ஷிலிங்கு) ஆம். எழுதவேண்டிய விலாசம்.—பொறுப்பாளர், "பாரதி" ஆலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா, என்பது.

OFFICE OF THE ... MADRAS

வறுமைப் பிணி

[372-வது பக்கத் தொடர்ச்சி]

இந்நிலையினராய பெருஞ்சித்திரனார், பின்னர்ப் பிறர் உறும் இன்பமே தானுறும் இன்பமெனக் கொண்ட குமணனை யண்மிக் கூறுகின்றார்: —

வாழு நாளோ டியாண்டுபல வுண்மையில்
தீர்தல்செல் லாதென் னுயிரெனப் பலப்புலந்து
கோல்கா லாகக் குறும்பல வொதுங்கி
நூல்விரிந் தன்ன கதுப்பினள் கண்டுயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்
பசந்த மேனியொடு படாட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா விளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
நீருலை யாக வேற்றி மோரின்
றவிழ்ப்பத மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த வுடுக்கையள் அறம்பழியாத்
துவ்வா ளாகிய என்வெய் யோளும்
....
பசிதினத் திரங்கிய வொக்கலும் உவப்ப
உயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலேன் உவந்துநீ
இன்புற விடுதி யாயிற் சிறிது
குன்றியுங் கொள்வல் கூர்வேற் குமண!
அதற்பட அருளல் வேண்டுவல் விறற்புகழ்
வசையில் விழுத்திணைப் பிறந்த
இசைமேந் தோன்றல்நிற் பாடிய யானே"

* * *

"..எள்ளுற்று
இல்லுணாத் துறத்தலின் இன்மறந் துறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழுஞ் சோறுங் கடைஇ யூழின்

உள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்தும் மதியங் காட்டியும்
நொந்தன ளாகி............

நனவில்

அல்ல லுழப்போள் மல்லல் சிறப்பச்
செல்லாச் செல்வ மிகுத்தனை வல்லே
விடுத்தல் வேண்டுவல்........................

(இ - ள்) "எனக்குச் சென்ற ஆண்டுகளோடு, இனி வாழு நாட்களும் பல வுண்மையிற்போலும், எனதுயிர் இன்னும் போகின்றதில்லை" யென்று சொல்லிக்கொண்டு பலவாக வெறுத்து, நூலை விரித்தாற்போலும் மயிரையுடையவளாய்க் கண்மறைந்து, தான் பிடித்த தண்டே காலாகக் கொண்டு, அடிமேல் அடிவைத்து முன்றில்வரையும் நடந்து போகமாட்டாத மூப்பையுடைய எனது தாயும்; பசப்புற்ற மேனியுடனே நினைவு வருத்த வருந்தி, மருங்கிலே எடுத்த பல சிறு பிள்ளைகள் பிசைந்து மெல்லுதலால் உலர்ந்த முலையினையுடையளாய், மிகவும் வருந்திக் குப்பையின்கண் முளைத்த கீரையினது முன்பு கொய்யப்பட்ட கணுவினின்று கிளைத்த முதிராத இளைய தளிரைப் பறித்து உப்பின்றியே நீரை உலையாக ஏற்றிக் காய்ச்சி, மோரின்றி, உயர்ந்த உணவை மறந்து பசிய இலையைத்தின்று, மாசோடு கூடிக் கிழிந்த கந்தையை யணிந்தவளாய், அறக்கடவுளைப் பழித்து உண்ணுளாகிய என் காதலியும்; பசித் தினலால் வருத்தமுற்ற ஈண்டிய எனது சுற்றமும் உவப்ப, கூர்வேற் குமண! மகிழ்ந்து நீ யான் இன்புற விடுவையாயின் சிறிதாகிய குன்றியென்னும் அளவையுடைய பொருளாயினும் கொள்வேன்; மற்று, ஏந்திய மருப்பையுடைய யானையேயாயினும் முகமாறித் தரும் பரிசிலைக் கொள்ளேன்; ஆதலின், ஆன்ற குடிப்பிறந்த இசை மேம்பட்டோய்! ஏழை மனம் அவ்வின்புறுதற்கண்ணே பட அருளுதலை வேண்டுவேன்]

எனது மனை உண்ணப்படுவனவற்றைக் கைவிடுதலான், அம்மனையை யிழந்து நினையாது உறைகின்ற, புல்லிய உளைமயிர்போலும் குடுமியையுடைய புதல்வன் பலபடியும் பாலில்லாத வறுமுலையைச் சுவைத்துப் பால் பெருனுப் கூழையும் சோற்றையும் வேண்டி, முடுகி முறைமுறையே உள்ளொன்றில்லாத வறிய அடுக்கலத்தைத் திறந்து அங்கு ஒன்றுங் காணுதழ, அதனைப் பார்த்து "அதோ! புலி வருகிறது! அழாதே" என அச்சங்காட்டியும், (அதனால் அழுகை மிகுதலேயாதல் கண்டு) "அதோ! நிலாவைப் பார்! நிலா! நிலா! எங்கே போகிருய்?" என நிலாவைச் சுட்டி விளையாட்டுக் காட்டியும் (அவ்வழுகையைத் தணிக்க) அருமையினளாய் நனவின்கண்ணும் துயராமுறுவோள் வளப்பமிக, தொலையாத செல்வத்தை மிகுத்தனையாய் விரையப் பரிசில் தந்து விடுத்தலை விரும்புவேன்."

"குப்பைக் கீரையேயன்றி வேறுணவு பெற்றிலேமெனினும், அதுதான் பசியின்றி உண்ண அமைகின்றதா? நாடோறும் எம் இல்லோர் கீரையையே கொய்துகொய்து உண்டு வந்தமையான், எளிதிற் கிடைத்த அதுவும் இதுபொழுது அரிதாகிவிட்டது; தளிரெலாம் உதவி வெறுந் தண்டுகளாய் நிற்கும் அக் கீரைச்செடிகள், எம் நிலைமைக்கிரங்கியே போலும், முன்னர்க் கொய்த கணுக்களிலேயே மீண்டும் மீண்டும் தளிர்விட, அந்தோ! எம் பசிப்பிணியால் அவை முற்றுத இளந்தளிரென்றுங் கருதாது கொய்துண்ணும் நிலைமையேம் ஆயினேம்" எனக்கூறும் இவர் நிலைமைக்காரோ மனமுருகார்? இனி இவர்மொழியில் ஐயம் விளைப்பதொன்றுளது. முன்னர் இளவெளிமான் சிறிதுகொடுப்பப் "புலிபார்த் தொற்றிய களிற்றிரை பிழைப்பின், எலிபார்த் தொற்ருதாகும்" எனக் கூறிய இவர் இங்கு "நீ இன்புற விடுதியாயிற் சிறிது குன்றியுங் கொள்வல்; மற்று, தவிர்ந்துவிடு பரிசிலாயின் கொல்களிறுயினும் பெறேன்" என மொழிகின்றூர். ஆயின் அவ் வெளிமான் தம்பி முகங்கோட்டிக் கொடுத்தனன் போலும்! அங்ஙனம் அவன் முகங்கோடற்கும் ஏதுவுளது. தனது உடன் பிறப்பாளனைப் பறிகொடுத்துத் தவிக்கும் அதுபொழுது அவன் முகம் மழுங்கித் தோன்ருது விளங்கிப் பொலியுமாறில்லையன்றே? எனினும் நம் புலவர் இதனை உணராதவரன்று; "உடன் பிறப்பாளனைத் தவிர்ந்து தவிக்கும் இவன் நிலைமையினும், தனது அரும்பசி களைந்து நின்ற ஆருயிர் முதல்வனை யிழந்து வருந்தும் தன் நிலைமையே மிக இரங்கத்தக்கது என இவன் மதித்திலனே" என்ற சீற்றத்தவராதல் வேண்டும். எண்ணையிட்டுச் சீவிச் சிக்கறுக்குந் திறமிலா வெளிமையால், உச்சியில் உள்ளங்கை யளவினுங் குறுகிய அளவில் வளர்ச்சியின்றிக் காற்றில் அசைந்தாடும் மயிரினையுடையோ னென்பார் 'புல்லுளைக் குடுமிப் புதல்வன்' என்றூர். இனி இவர் கூறும் மற்றொரு செய்தி மிக வருந்துந் தன்மையது. அது, பெரும்பசி வருத்தலான் வருந்திய மகவு வறுமுலை சுவைத்துப் பால் பெருது, கூழாவது பருகுவோமென அடுக்கலனைத் திறந்துபார்த்து அதனுள்ளும் ஒன்றையுங் காணுது அழுதல். இதனினும் பெருந்துயர் விளைப்பது, தாய் அக்குழவியின் பசியாற்ற வழியறியாது "அதோ! புலி! இதோ! நிலா!" எனக்கூறல்

பின்னர்க் குமணவள்ளல் பகடு கொடுப்பப் பரிசிலாகப்பெற்று, வெளிமா னூர்போந்து, பகட்டினை அவ்வூர்க் கடிமரத்தே யாத்துச்சென்று, முன்னர்ச்சிறிது பொருளே கொடுக்க விழைந்த வெளிமான் தம்பியை விளித்துத் "தோன்றலே! இரப்போரைப் பாதுகாப்பாய் நீயல்லை; அதனுல் இரப்போர்க்குப் புரப்போர் இல்லாதொழிவரு மல்லர்; இதோ! நின்னுடைய ஊரின் காவன்மரத்தே கட்டியுள்ள யானையைக் காண்பாயாக! அது யாம் பெற்ற பரிசில்!" எனக்கூறித் தம் இல்லம் போந்து மக்களும் மனைவியும் ஒக்கலும் உவப்பக் குமணனைப் பாடி விருந்துபுறந்தந்து நின்றூர். இளவெளிமான் ஒன்றுங்கொடாது வெருட்டியிருப்பினும் எதிருரையாடி அவனை யிழிவுபடுத்தல் பெருந்தகைமையன்றே! எனினும் வறுமைப் பிணியின் கொடுமை தன் தகைமையையும் மறக்கச் செய்ததுபோலும்!

இனி இவர் நிலைமையின் ஒரு சிறிதுந் தாழாத பெருந்தலைச் சாத்தனரின் பெருந்தகைமை, என்றும் போற்றுந் தன்மைத்து. அவர், தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றியிருந்த குமணனை யடைந்து, "அடைந்தாரின் மிடியைத் தீர்க்கும் ஆன்றகுடிப் பிறந்தோய்! சமைத்தல் இன்மையால் தேய்பின்றி யிருக்கும் அடுப்பின்கட் காளாம்பி பூப்பப் பசியான் வருந்திப் பாலின்மையால் தோலாந் தன்மையுடனே திரங்கித் துளைதூர்ந்த வறியமுலையை வறிதே சுவைக்குந்தொறும் அழுகின்ற தனது பிள்ளையின் முகத்தைப் பார்த்து நீரா னிரம்பிய கண்களையுடைய என் மனைவியின் துயரை யெளியேன் அறிந்து இத்துயர் தீர்த்தற்குரியாய் நீ யென நினைந்து நின்பால் வந்தேன்; நற்போர்க் குமண! என் வறிய நிலையை நீ யறிந்தாயாயின் இந்நிலையில் உன்னை வளைத்தாயினும் பரிசில் கொள்ளாது விடேன்" எனக்கூறும் தறுகண்மையை நம் மனம் நினைக்குங்கால் உடலம் விதிர் விதிர்க்கின்றது. என்னே இப்புலவரின் வன்னெஞ்சம்! ஏழை மக்களின் தாழ்நிலை போக்கி, அவர் உறும் இன்பமே தான்பெறும் இன்பமெனக் கருதிவாழ்ந்த குமணவள்ளல் அழுக்காறுற்ற தம்பியால் அரசுரிமை யிழந்து, ஆருயிரும் இழக்க நேருமோ என அஞ்சி நாடுதுறந்து காடுபுக்கொளித்து வாழ, ஆங்குந் துருவிச்சென் றடைந்து, அவன் நிலைமைக் கெட்டுணையு மிரங்காது, "நீ யெந்நிலையனுயினு மாக; இதுபொழுது யான் உற்றுள மிடியின் கொடுமையால் எவ்வகையிலாயினும் முயன்று உன்பால் பரிசில் கொள்ளாது விடேன்" எனக் கூறின் இவரினுங் கூற்றுவன் வேறெவனுவன்? ஆயினும், நம் சாத்தனர் இப்பழியேற்குந் தரத்தின ரன்று. மக்களியல்பை நன்கறிந்தவர் அவர் ஆதலின், குமணன்பால் ஒரு பொருளும் இலையெனினும், தன்னையே கரைத்தளிக்கும் முகிலோடொத்தவன் அவன் ஆகையால், தன் உயிர் ஈந்தாயினும் தன்னை யடைந்தோர் துயர்களைவானெனும் உறுதியும்; இளங்குமணன் தன் தமையன்பால் அழுக்காறுற்று, அரசைக் கவர்ந்தனனெனினும், தண்ணளியும் இன்னுரையும் வாய்ந்த தன் முன்னோன் உயிர் பிரிதலைச் சகியானெனுந் துணிபுங் கொண்டே, தன் துயர் தடிதலோடு தனதருந் தலைவன் குமணனது துயரையும் போக்கலாம் எனும் நோக்கொடு அங்ஙனம் உரையாடத் தொடங்கினுர்.

அவர் உரையைக் கேட்ட குமணன் "அந்தோ! என்பால் வந்த நீவிர் பயனின்றி வாடினராகப் பெயர்தல் எனது நாட்டை யிழந்ததனினும் மிக்கதுயர் தருவதாகும்; எனினும், என்னால் இடுக்கண் உண்டென கருதும் என் இளையோற்கு என் தலையைக்கொண்டு காட்டுதல்வழியே எனது இறப்பை யறிவிப்பின், அவன் இடுக்கணும் அழியும்; உமது நலிவும் மெலியும், யானும் அமைதியொடு இறப்பேன்; ஆதலின், யான் விரும்பியவழியே செய்க" எனக்கூறித் தன் வாளை யீந்தான். புலவரது மனம் அக்கொடுஞ் செயலுக் குட்படுமோ? குமணன் காத்து வாள் புலவர் கைப்புக்கதும் அவர் முகத்தே சிறிது களி துளங்கிற்று. வள்ளலிடத்து விடைபெற்று வாளொடு போந்தார் இளங்குமணன்பால். நிகழ்ந்த கதையை உரைத்தார். அவனும் மனமுருகித் தன் தவறுணர்ந்து, அண்ணனை யடைந்து மன்னிப்புக் கேட்டு, அவற்கே அரசை உரிமையாக்கி, புலவர்க்கும் பொருளளித்துப் போக்கினுன். நம் சாத்தனர் வறுமைப் பிணியால் வாடினரேனும், அவரது விழுமிய நோக்கமும், நுண்ணிய அறிவும், திண்ணிய நெஞ்சமும் அம்மம்ம! வியத்தற்குரியன.

(முற்றிற்று)

அப்பர்

4. பெரியபுராணத்தில் காணத திருப்பதிகளில் அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பங்களும்

[369 பக்கத் தொடர்ச்சி]

2. தஞ்சைஜில்லாத் திருப்பதிகளில் முற்பகுதி.
சீர்காழியில் அப்பர் பாடியது முதல்
திருப்பழையாறையில் சமணழித்த வரையில்.

முதற் தொகுதி

(1) திருவெண்காடு.—*இத்திருப்பதியில் சம்பந்தர் பாடிய பதிகங்கள் மூன்றும், அப்பர் பதிகம் இரண்டும் திருமுறைகளில் உள.

(2) திருப்புள்ளிருக்கும் வேளூர்.—† இது வைதீச்வரன்கோயில் என்று வழங்கும். இதில் அப்பர் திருக்குறுந்தொகை ஒன்றும் திருத்தாண்டகம் ஒன்றும், சம்பந்தர் பாடலும் திருமுறையிற் காணலாம்.

(3) திருக்குரக்குக்கா.—‡ இதில் ஒரு திருக்குறுந்தொகைப் பதிகம் அப்பர் பாடிய துளது.

(4) திருச்சாய்க்காடு.—இதில் அப்பர் பாடிய திருநேரிசைப் பதிகம் 1, திருத்தாண்டகப் பதிகம் 1, ஆக இரண்டும், திருஞானசம்பந்தர் பதிகங்கள் இரண்டும் திருமுறையில் உள.

(5) திருவலம்புரம்.—இதில் சம்பந்தர் பதிகம் 1, அப்பர் பதிகம் 2 (திருநேரிசை 1, திருத்தாண்டகம் 1) திருமுறைகளிற் காணலாம்.

இவ்வைந்துதிருப்பதிகளில் அப்பர் பாடிய பதிகங்கள் சற்றேறக்குறைய ஒரேகாலத்தில் பாடியவை என்பதற்கு அப்பதிகங்களினின்றும் ஆதாரவுகள் காட்டக்கூடும்.

இதுநிற்க. பெரியபுராணத்தில் திருஞான சம்பந்தர் சரித்திரத்தையும், திருநாவுக்கரசு நாயனர் சரித்திரத்தையும் ஒன்ருய் வாசிக்குங்காலை, திருநாவுக்கரசுநாயனர் சீர்காழிக்கு வந்து ஆளுடையபிள்ளையாரைத்தரிசித்துக் காழியர்கோன், சிதம்பரம் திருமுதுக்குன்றம் திருத்தூங்கானைமாடம் திருஅரத்துறை முதலிய திருப்பதிகளைத்தரிசித்து மீண்டபின்னர் என்றும். சீர்காழிக்கு வருமுன்னர் அப்பர் இப்பதிகளிற் சென்று பதிகங்கள் பாடினுரென்றும் தில்லையில் சம்பந்தர் வரலாறறிந்து அவரைக் காண முதலில் விரும்பினரென்றும் திருநின்ற சருக்கத்தில் கண்டோம். *

* சீர்காழி ஸ்டேஷனிலிருந்து கிழக்கே கற்சாலை மார்க்கத்தில் 8 மைலில் தென் திருமுல்லைவாயல். இதற்குத் தெற்கே கரைமார்க்கமாய்ச் சீர்காழி ஸ்டேஷனுக்குத்தென்கிழக்காய் 8 மைலில் உள்ளது திருவெண்காடு. இதற்குத் தெற்கே திருச்சாய்க்காடு என்னும் சாயவனம். இதற்குத் தென்கிழக்கே, காவிரிப்பூம்பட்டணத்திற்குத் தெற்கே திருவலம்புரம். திருச்சாய்க்காடு திருவலம்புரம் இவற்றிற்கு ரயில்வே ஸ்டேஷன் மாயவரம்.

† இது ரயில்வே ஸ்டேஷன்.

‡ வைதீச்வரன் கோயில் ஸ்டேஷனிலிருந்து 3¾ மைலில் திருக்கருப்பறியலூர். இதன்வடக்கே முக்கால் மைலில் (ஆற்றுக்கு பரிசு) திருக்குரக்குக்கா விருக்கின்றது.

* சம்பந்தரும் இப்பதிகளைத் தரிசித்து மீண்ட பின்னரே சீர்காழிக்கு அப்பர் எழுந்தருளியதாய்ப் பெரியபுராணம் கூறும். ஆகையால் சம்பந்தரும் அப்பரும் ஒருவரையொரு

திருநெல்வாயி லரத்துறையில் சம்பந்தர் பாடல்களை நாம் சற்றுக் கவனித்துப் பார்ப்போமாயின் அவர் அப்பர் வரலாற்றை யுணர்ந்தவர்போல் காணப்படுகின்றார். அங்ஙனமே அப்பர் திருக்குறுந்தொகையின் 9-ம் பாசுரத்திலிருந்து, இரட்டுற மொழிதலாய்ச் சம்பந்தர் அத்தலத்திற் பெற்ற வைபவத்தையும் அப்பர் எண்ணியிருக்கலா மெனவும் தோன்றுகிறது.

திருத்தூங்கானை மாடத்திய அப்பர் * 2-ம் பாசுரமும் சம்பந்தர் 4-ம் பாசுரமும் ஒன்றுக்கொன்று எதிரொலிபோல் விளங்குகின்றன. திருவெண் காட்டில் சம்பந்தர் "கண்காட்டு நுதலானும்" என்னும் பாசுரமும் திருநாவுக்கரசின் திருக்குறுந்தொகை முதற் பாசுரமும் விஷயம் ஒன்றாய்க் காணப்படுகின்றது போல், திருமுதுகுன்றத்திலும் அப்பர் திருத்தாண்டக முதல் பாசுரத்திற்கு விருத்தியுரைபோல் சம்பந்தர் பாசுரங்கள் விளங்குகின்றன†. இதன்றியும் சம்பந்தர் பாடலொன்று அப்பர் "நாமார்க்கும் குடியல்லோம்" என்பதை யெண்ணிப்பாடியது போலும் காணப்படுகின்றது¶. ஆயினும் சிதம்பரத்தில் அப்பர் பாசுரங்களுக்கும் சம்பந்தர் பாசுரங்களுக்கும் பொதுவாய்விளங்கும் தொடர்மொழிகள் முதலியன காணப்படவில்லை.

திருவாமாத்தூரில் பாடிய திருக்குறுந் தொகையில் அப்பர் திருஞான சம்பந்தரை ஞாபகத்தில் வைத்திருந்தாரெனக் காட்டும் தொடர்மொழிகளும்உள‡. திருக்கோவலூர் வீரட்டானத்திலும் இருவர் பதிகங்களும் விஷய வொற்றுமை பெற்றவையாயிருக்கின்றன.

இவற்றை யெல்லாம் நாம் கவனிப்போமாயின், அப்பருக்கும் திருஞானசம்பந்தருக்கும் அன்னியோன்யம், பெரியபுராணத்தில் காட்டியதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாயிருந்திருக்க வேண்டுமென்றும், தென்ஆற்காட்டில் உள்ள சிவஸ்தலங்களில் * சில அப்பரும் திருஞானசம்பந்தரும் ஒன்றாய்ச் சென்று தரிசித்திருக்கலாமென்றும், சீர்காழிக்கு அப்பர் சென்றதும் சம்பந்தர் வேண்டுகோளால் நேர்ந்திருக்கலா மென்றும், சீர்காழிக்குக் கிழக்கிலுள்ள திருவெண்காடு, திருச்சாய்க்காடு, திருவலம்புரம் என்னும் இம்மூன்று ஸ்தலங்களும் அப்பர் சீர்காழியை விட்டுத் திருக்கோலக்காவுக்குப் போவதற்கு முன் தரிசித்தவை யென்பதும் அநுமானிக்கலாகும். அவ்வாறு திருக்கோலக்காவுக்குப் † போவதற்கு முன்னரென்பது ஏலாதெனினும் திருக்கோலக் காவினின்று அப்பர் திருக்கருப்பறியலூருக்குச் சென்றபோது திருக்குரக்குக்காவைத் தரிசித்து அங்குத் திருக்குறுந்தொகை பாடி, திருப்புன்கூர் திருநீடூர், திருக்குறுக்கை வீரட்டானம் சென்று அதினின்று (கிழக்காய்) திருநின்றியூருக்கு வந்து திருநனிபள்ளிக்குச் சென்றகாலை, மேற்கண்ட மூன்று ஸ்தலங்களை (திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருவலம்புரம்)

வர் முதல்முதல் சந்திக்கு முன்னர், இவ்விருவரும் தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள இத்திருப்பதிகளுக்குச் சென்று பாடல்கள் பாடினார் என்பது வெளியாகின்றது. ஆயினும் சேக்கிழார் இப்பதிகளின் திருப்பதிகங்கள் இருவரும் ஏககாலத்தில் பாடியவெனக் காட்டவில்லை.

[பிணிநோய்

* ஆவா சிறுதொண்ட னென்னினைந் தானென் றரும்
காவா தொழியிற் கலக்குமுன் மேற்பழி காதல்செய்வார்
தேவா திருவடி நீறென்னைப் பூசுசெந் தாமரையின்
பூவார்கடந்தையுட் டூங்கானை மாடத்தெம்புண்ணியனே.
—அப்பர்

ஊன்றும் பிணிப்பிறவி கேடென்றிவை
யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
மான்றும் மனங்கருதி நின்றீரெல்லாம்
மனந்திரிந்து மண்ணில் மயங்காதுநீர்
மூன்று மதிலெய்த மூவாச்சிலை
முதல்வர்க் கிடம்போலு முகில்தோய்கொடி
தோன்றும் கடந்தைத் தடங்கோயில்சூழ்
தூங்கானை மாடம் தொழுமின்களே.
—சம்பந்தர்

† கருமணியைக் கனகத்தின் குன்றொப் பானைக்
கருதுவார்க் காற்ற வெளியான் றன்னைக்
குருமணியைக் கோளரவ மாட்டு வானைக்
கொல்வேங்கை யதளானைக் கோவணவன் றன்னை
அருமணியை யடைந்தவர்கட் கமுதொப் பானை
யானஞ்சு மாடியைநா னபயம் புக்க
திருமணியைத் திருமுதுகுன் றுடையான் றன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே.
—அப்பர்-1

தேவா சிறியோம்பிழையைப் பொறுப்பாய்பெரியோனே
ஆவா வென்றங் கடியார் தங்கட் கருள்செய்வாய்
ஓவா வுவரி கொள்ள வுயர்ந்தா யென்றேத்தி
மூவா முனிவர் வணங்கும் கோயில் முதுகுன்றே
சம்பந்தர், பண் காந்தாரம்—1

¶ முரசதிர்ந் தெழுதரு முதுகுன்ற மேவிய
பரசமர் படையுடை யீரே!
பரசமர் படையுடை யீருமைப் பரவுவார்
அரசர்க ளுலகிலா வாரே —சம்பந்தர்.

‡ பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்
கண்ணித் தாகு மமுதினை யாமாத்தூர்
சண்ணிப் பானைத் தமர்க்கணித் தாயதோர்
கண்ணிற் பாவையன் னானவன் காண்மினே
திருவாமாத்தூர்- திருக்குறுந்தொகை 8

* துன்னவாடை யொன்றுடுத்துத் தூயவெண்ணீற்றினராகி
உன்னிநைபவர்க் கல்லால் ஒன்றுங்கை கூடுவதன்றால்
பொன்னுமாமணி யுந்திப் பொருபுனல்வாமல்குகரைமேல்
அன்னமாரு நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே

என்னும் சம்பந்தர் பாடலில் முதலிரண்டு அடிகள் பாடும்போது அப்பரையே அவர் எண்ணினா ரென்பதற்குச் சேக்கிழார் திருமொழியையும் கவனிக்க:—

சிந்தையிடை யறாவன்புந் திருமேனி தனிலசையும்
கந்தைமிசை யாங்கருத்துங் கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற்பொலி திருநீறு
மந்தமிலாத் திருவேடத் தரசெதிர் வந்தணைய
—திருஞானசம்பந்தர் புராணம் 270.

† (i) ஆண்டவர செழுந்தருளக் கோலக் காவை
யவரோடுஞ் சென்றிறைஞ்சி யன்பு கொண்டு
மீண்டருளி னாரவரும் விடைகொண் டிப்பால்
வேதநா யகர்விரும்பும் பதிக ளான
நீண்டகருப் பறியலூர் புன்கூர் நீடூர்
நீடுதிருக் குறுக்கைதிரு நின்றி யூரும்
காண்டகைய நனிபள்ளி முதலா நண்ணிக்
கண்ணுதலான் கழறொழுது கலந்து செல்வார்
—திருநாவுக்கரசுநாயனார் புராணம் 189.

(ii) அந்நாள்சில நாள்கள்செல்ல வருட்டிருநா வுக்கரசர்
மின்னார்சடை யண்ணலெங்கு மேவிடங்கும் பிடவேண்டிப்
பொன்மார்பின்முந் நூல்புனைந்த புகலிப்பிரானிசைவோடும்
பின்னாகவெய்த விறைஞ்சிப்பிரியாதவண் பொடும்போந்தார்
—திருஞானசம்பந்தர் புராணம் 274.

பாடி திருநனிபள்ளிக்குச் சென்றன ரென்பதற்குப் பெரியபுராணம் இடங்கொடுக்கின்றது. பெரியோர் ஆராய்க. இதன்றியும் வேறு எக்காலத்திலும் அப்பர் அத்தலங்களுக்குச் சென்றார் என்பது பெரியபுராண வரலாற்றின் ஒழுங்கில் அடங்காது.

மேற்கண்ட ஐந்து ஸ்தலங்களில் வைதீச்வரன் கோயில் திருப்புன்கூருக்கு கிழக்கே 1¾ மைலிலிருப்பது. ஆகையால் திருநாவுக்கரசு நாயனார் திருப்புள்ளிருந்த வேளூரைப் பாடியது திருப்புன்கூருக்குச் சென்ற காலத்திலென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இத்தலத்தில் சம்பந்தரும் அப்பரும் ஏககாலத்தில் செல்லவில்லை யென்பதற்கு அன்னோர் பாசுரங்களிலுள்ள அபிப்பிராய பேதங்கள் காண்க.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

12. கார்முகப் படலம்

[371 பக்கத் தொடர்ச்சி]

கார்முகத் திடியினைக் கேட்டிலள் கன்னி.

பொழிந்தநெய் ஆகுதிவாய்வழி பொங்கி எழும்
கொழுங்கனல் என்ன எழுந்த இராமனே,

தோகைய ரின்னன சொல்லிட நல்லோர்
ஓகை விளம்பிட வும்ப ருவப்ப
மாக மடங்கலு மால்விடை யும்பொன்
நாகமு நாகமு நாண நடந்தான்.

[மாதர்கள் இப்படிப்பட்டவைகளைச் சொல்லிக்கொண்டிருக்கவும், முனிவர் முதலாய நல்லவர்கள் தமது சந்தோஷத்தைக் கைகளைத்தட்டியும் சிரமசைத்தும் தெரிவிக்கவும், உயர்ந்த சிங்கமும், பெருமை பொருந்திய ரிஷபமும், மேருமலையும், யானையும் (இவனுக்குத்தோற்று) நாணும்படி வில்லிருந்த இடம் நோக்கி நடந்தான்]

நோக்கினன் சென்றான் எடுத்தான் ஒடித்தான் இந்நெடுஞ்சிலையை. இராகவன் இவ்வில்லைக் கையாண்ட அவ்விமைப்பொழுதில் அவனது மனம் எந்நோக்கமும் நிலையும் உற்றிருக்குமெனக் கொள்ளுதல் எற்புடைத்தாகுமென்பதை முன்னர் விரிவாகப் பேசியுள்ளோம். சீதைக்குச் சூட்டுமோர் மாலையென வெடுத்து, தாளின் மடுத்ததும் நாணுதிவைத்ததும் அங்கிருந்தோர் யாரேனும் காணுமுன் இற்றுவிட்டதன்மை, தன் கைத்திறத்தைக் காட்டுமோர் ஊக்கத்தைப் பெருமிதத்தால் கொண்டிருப்பதனினும், சீதையைத் தனக்குச் சேணுறவைத்ததெனுஞ் சீற்றத்தால் அச்சிலையை உடைத்தொழிக்கும் பான்மையனுதல் இந்நாடகத்திற்கு நன்கு பொருந்தும். கம்பரும் பின், "விரைக் கருங் குழலிக்காக வில்லிற நிமிர்ந்து வீங்கிய" தோளினன் என்றே இவனைப்பாராட்டுவாராதலால், சிலைக் கல்வியைக்காட்டும் நிமித்தம் அவன் இச்செயல் செய்தானென்பது கவியின் கருத்துமன்று. உலாவரும் இராமனை நோக்கிய ஒருத்தி "இவன் வில்லிறுத்தது, சீதையின்பால் காமத்தாலன்று கல்வியினால்" எனத் தெழித்தனளெனின், அதுவொன்றே அவ்வேழை உற்ற மையலால் அறிவு நீங்கி நின்றனளவ ளென்பதற்குப் போதிய சான்றாகும்.

இந்நிகழ்ச்சியினைப் பகரும் செய்யுளிரண்டும் நவில்தொறும் நயமிக நல்குகின்றன.

ஆடக மால்வரை யன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதை யெனும்பொற்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலை யிதென்ன வெடுத்தான்.

தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினை யாரு மறிந்திலர் கையால்
எடுத்தது கண்டன ரிற்றது கேட்டார்.

கேட்டவர் அங்கு அயலிருந்தோர்மாத்திரமே யலர். இடத்தாலும் காலத்தாலுஞ் சேய்மையாயினோரும் இச்சிலை யிற்றதொரு பேரொலியைச் செவியேற்றனர்.

ஆரிடைப் புகுது நாமென்
றமரர்கள் கமலத் தோன்றன்
பேருடை யண்ட கோளம்
பிளந்ததென் றேங்கி நைந்தார்
பாரிடை யுற்ற தன்மை
பகர்வதென் பாரைத் தாங்கி
வேரிடைக் கிடந்த நாகம்
இடியென வெருவிற் றன்றே.

[பிரம்மன் படைத்த பெரிய அண்டங்கள் பிளந்தனவென்றேங்கி யாரிடத்தில் சென்று நாம் தஞ்சம்புகுவதென்று தேவர் வருந்தினார்கள். இப்பூமியின் வேர்போல் தாங்கிக்கொண்டிருக்கின்ற ஆதிசேஷனும் தனக்கேற்ற வோர் பேரிடி இதுவென்று அச்சங்கொண்டான் எனின், ஆகாயமும் பாதாளமும் இவ்வாறாக, இப்பூமியில் நிகழ்ந்ததைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ]

பாரிடை நிகழ்ந்ததைப் பகர்தல் வேண்டாவெனச் செப்பினாராயினும் கம்பர் சிறிதுசிறிததனையுங் காட்டாதுவிடுத்திலர். மற்றெல்லாநிகழ்ச்சிகளைப்போன்றே இவ்வில்லொடிந்த ஒலியும், சிலர்க்கு அச்சமும், சிலர்க்கு உவகையும் சிலர்க்குச் சீற்றமும், சிலர்க்கு எதிர்பாராத நலங்களும் ஒருங்கே எய்துவித்தது.

விண்ணவரும் மண்சுமந்த நாகமும் வெருக்கொள வெழுந்தவிப் பெருமொலி அயோத்தியிலிருந்த தயரதன் செவிகளைச் சேர்ந்தது. ஆயினும் அந்நாளவன் அதன் காரண முணரானெனினும், பின் ஜனகனது தூதர் வந்து செப்பியபோது, மலையென வளர்ந்த தோளினனாகி அந்த,

வெற்றிவேன் மன்னவன் றக்கன் வேள்வியில்
கற்றைவார் சடைமுடிக் கணிச்சி வானவன்
முற்றவே மூலகையும் வென்ற மூரிவில்
இற்றபே ரொலிகொலோ விடித்த தீங்கென்றான்.

[வெற்றி பொருந்திய வேலையுடைய மன்னனாகிய தயரதன், "அடர்ந்து நீண்ட சடை முடியையும் மழுவாயுதத்தையும் உடைய சிவபிரான், தக்ஷனுடைய யாகத்தில் ஏழுலகம் முழுவதும் வெல்லநின்ற அவ்வலியமைந்த வில் ஒடிந்த பேரோசைதானோ அன்று நாம் இடிபோல் முழங்கக் கேட்டது]

என வியந்தனன். வியப்போடு மகிழ்வும் எய்தினு னென்பதை, பின்னர் இராமனுக்கு முடிசூட்ட எண்ணியபோது, வசிட்டன் அவனது பெருமைகளை எடுத்துப்பேச அவன், "பெற்றவன்றிலும், பிஞ்ஞகன் பிடித்த பெருவில் இற்றவன்றிலும்..........பெரிய தோர் உவகையனுயினன்" என்று கம்பர் இயம்புவதி னின்று எளிதில் தெளியலாம்.

காரண மறிந்தபின் தயரதனது மகிழ்விற்கு இடனுய இம்முழக்கத்தை, வேந்தர் யாரையும் இருபத்தொரு தலைமுறை வேரறக்களைந்து, பெருகிய குருதி நீரால் தன் தந்தையின் கடன் கழித்து, உலகினை முனிவற்கீந்து, ஆறிய சினத்தனுகி மகேந்திரகிரியின்கண் மாதவங்கள் புரிந்திருந்த பரசுராமனுங் கேட்டான். கேட்டவன் கடுகிவந்து மணமுடிந் தயோத்திக்கு வழிக்கொண்ட தயாதராமனை எதிர்ப்பட்டு இச்சிவனது, "சிலையை நீ இறுத்தவோசை செவியுறச் சீறிவந்தேன்" எனத் தன் வருகையைத் தெரிவித்துக்கொண்டனன். இத்துணைச் சீற்றம் ஒருவன்பால் எழுப்பியதிவ் வொலி.

ஊடிய காதல் மாதின் உலவிய புலவி தீர்க்க நீடிய தவங்கள் யாது நேர்வதென் றுள்ளம் நைய வாடிய முகத்தராகி வைகிய காளை மாரைத் தேடியேவந்து சேர்ந்து இன்பத்தைச் செய்யுமாறு, இவ்வில்லொலி அன்று பயந்த நன்மையையும் கம்பர்,

உண்ணற வருந்தி னாரிற்
 சிவந்தொளிர் கருங்கண் மாதர்
புண்ணுறு புலவி நீங்கிக்
 கொழுநரைப் புல்லிக் கொண்டார்.

[உண்ணுதற்குரிய கள்ளைக் குடித்தவர்போல் (புலவிக் கோபத்தால்) சிவந்து விளங்குகின்ற கண்களுடைய மாதர், (இவ்வொலியால் துணுக்கமுற்று) மனத்தைப் புண்படச்செய்யும் புலவி நீங்கித் தத்தம் கணவர்களைக் கட்டிக் கொண்டனர்]

என்னுமாற்ருல் இனிதின் இயம்பலாகின்றனர்.

இன்னோன்ன முன்சொன்னவர் யாவரும் அக்கார்முகம் இற்றதோர் அரவத்தை அற்றைப்பொழுதே நேராகக்கேட்டவர் ஆவர். மற்று, ஆண்டுபல சென்ற பின்னர் இவ்வொலியின் எதிரொலியை, "எடுத்தது கண்டார் இற்றதுகேட்டார்" என்ற கம்பரடியில்கேட்டவர் வில்லிபுத்தூரார், அக்கடுப்பினையும் ஒருவாறு தன் மனக்கண்ணுல் காணவுங் கண்டார். திசையனைத்தும் வளைந்த நிவாதகவசர் காலகேயர்களை, இரவி வந்ததொரு திசையின்வாய் நிசியெனப் பொருத தன்னருஞ்சேய் அருச்சுனனை இந்திரன் ஐராவதக்களிற்றின் பிடர்வைத்து அமராவதியை உலாவந்தபோது, அதுகண்ட ஒரு விஞ்சையன், 'பொய்யுடைத்தலத்தோர்க்கின்ன பொறுக்குமோ' எனத் தகைதலும்,

ஆதிநா யகன்மா மாய னமரர்தந் துயரு மேனைப்
பூதல மடந்தைக் குற்றபுன்மையுந்தீர்ப்பானெண்ணிச்
சீதைதன் கொழுந னுன திண்டிற லிராமன் போல
வோதநீ ருலகின் மீண்டு மருச்சுன னுருவங் கொண்
 டான்

[ஆதிநாயகனுகிய மாயன் தேவர்களுடைய துன்பத்தையும் பூமாதேவியின் தாழ்மையையும் தீர்க்க எண்ணிச் சீதையின் கணவனுன திண்ணிய பராக்கிரமம் பொருந்திய இராமன் ஆனதுபோல, மீண்டும் அக்காரியம் செய்யும்பொருட்டுக் கடலால் சுழப்பட்ட உலகில் அருச்சுனனுக அவதாரஞ் செய்தான்]

என்று அவ்விஞ்சையனுக்கும் மற்றுள அமரருக்கும் விளங்கக்கூறித் தன் சுதன்மை மண்டபத்தின்கண் அரியணையில் அருச்சுனனை அமர்த்தி, அத்தானவர்ப் பொருதபோரில் அவனுக்குத் தேரூர்ந்த தனதுசாரதி மாதலிதன்னை நோக்கிப் "புரிசிலை விசயற்குற்ற போர்த் தொழில் புகல்நீ" யென்றான். திண்திறல் இராமனே மீண்டுமிவ் விசையனுய்த் தோன்றினுன் எனத் தேவர்கோன் உரைத்த மாற்றம் கேட்டிருந்தவக் குலப்பாகன், தன்னுல் தேர் ஊரப்பெற்ற பார்த்தனது வில்லாண்மையை விளம்புதற்குமுன் கம்பரியற்றிய இக்கார்முகப்படலத்தை விரைவினி லெடுத்தொருமுறை யோதிக்கொண்டனன் எனக் கருதும்படி,

 வானவர் குழுவுக் கெல்லாங்
கொற்றவ வென்னு லின்று கூறலாந் தகைமைத் தன்று
லுற்றெதிர் மூன்றுகோடி யசுரரு முடனேசேர [டேன்
இற்றது கண்டேன் பின்னர் வில்லினு ணிடியங் கேட்

[தேவர்கள் தொகுதிக்கெல்லாம் தலைவனே, அர்ச்சுனனது, வில்திறத்தை என்னுல் கூற இயலாது. எதிர்த்து நெருங்கிய மூன்று கோடி அசுரரும் ஒருங்கே துண்டித்து விழுந்தது கண்டேன்; அதன் பிறகு வில்லின் நாண் செய்த இடிபோன்ற முழக்கையும் கேட்கலானேன்]

என்று சாற்றினுன். "எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்" என்னுமக் கம்பரது சுருங்கச்சொல்லும் அழகுவாய்ந்த அடி, பாரதநூலுடையார் செவியில் இச்செய்யுள் பாடுங்கால் தொனித்துக்கொண் டிருத்தல்வேண்டும். அதனை வில்லிபுத்தூரார் தன்னுடைய நிகழ்ச்சிக் கேற்பச் சுருங்கச் சொல்லலோடு மிகையுயர்வுநவிற்சியும் சேர்த்து அணிசெய் தமைத்துக் கொண்டனர்.

கவிகளுக்கு இருக்கின்ற நெஞ்சழுத்தம் வேறு யாருக்கும் இருக்க இயலாது. உலகமலைவான விடயங்களை அவர் அஞ்சாது கூறுவர். கூறுகின்ற அச்செம்மைபால் நமது மனத்தைக் கொள்ளைகொண்டு அடிமையாக்கி வைத்திருக்கின்றன ராதலால் அப்பொய்யுரையை நாம் வேதமெனக்கொண்டு விரும்பலாகின்றோம். ஆயினும், ஈண்டு உரைப்பதற் கொன்றுளது. ஆட்சிக்குரிய ஆற்றலுடைய புலவோர்க்கே நம்மனம் அடிமையாக அருத்திபுரிகின்றது. அல்லாது, புன்கவிகள் நயமின்றிப் பொய்யைமாத்திரம் விதிக்கும்போது, கொடுங்கோன் மன்னனிட்ட சட்டத்திற்கிகல்வதுபோல் வெருவி வெறுக்கின்றோம். வில்லொன்று இற்றதென்றால் அத்தமரம் மகேந்திரம் முதல் அயோத்திவரையிலும் விண்ணுலகுமுதல் பாதலம் ஈருகவும் கேட்டதென்னுமிக் கருத்தைப் பெரியதொரு மலைவென்று எண்ணிப் பேசவேண்டா. அத்தூரங் கேட்டதன்று ஆச்சரியம். பிரம்மனண்டம் பிதிர்ந்ததென்று அமரரை அலமரக்கண்ட இப்பேரொலி, சேடன் சிரத்தில் இடியென உருண்ட இம்முழக்கம், தயாதனை அயோத்தியில் திகைக்கச் செய்த இத்தமாம், எறிமழுவாளவன் சினமுறச் சென்றெற்றிய இவ்வோசை, அயலுள கன்னிமாடத்திருந்த சீதையின் காதளவு எட்டாததொன்றே உலகம் மலைய உற்று நிற்கின்றது. மற்றிவ்வொலி அவள் பொருட்டே எழுந்ததுமாகும். ஆயினும் அப்பெண்ணரசி ஒன்றுங் கேட்டிலள், அறிந்திலள். கம்பர், இங்கு இக்கார்முகச்செய்தி யிவ்வாருக அங்கு அந்த,

சிற்றிடைப் பெரிய கொங்கைச்
 சேயரிக் கரிய வாட்கண்
பொற்றொடி மடந்தைக் கப்பா
 லுற்றது புகல லுற்ரும்

[சிறிய இடையையும், பெரிய கொங்கைகளையும் செவ்வரிபடர்ந்த கரிய வாள்போன்ற கண்களையும், பொன்வளையல்களையும் உடைய மடந்தைக்கு நிகழ்ந்ததை இனிக் கூறுவோம்]

எனத் துவக்கி அவளது அரிய நிலையையும் புலம்புமொழிகளையும் இயம்பும்போது, அப்பாசுரங்களின் ஓசைக்கும் பழுத்தொழுகு பொருள்நயங்களுக்கும் வயமாகிநாம், நீலமாலை ஆடியும்பாடியுஞ் சென்றவட்கு இச்செய்தியைப் புதியதாய்ச் சாற்றுமளவும் சீதையாதொன்று முணராதிருந்ததியற்கையன்றெனுமோர் ஐயமும் தோன்றலின்றிக் காக்கப்பெறுகின்ரும்.

மாறன் பாப் பாவினம்.

[367-வது பக்கத் தொடர்ச்சி]

கலிப்பா.

தரவு.

பொலந்தளிர் மிளிர்தரப் பொறையுயிர்த் துலவா
தலந்தழை கோங்கரும் பரும்பிநறை ததும்புநறு
நெய்தல் மலர்ந்துள பொற்புடைக் கமல
மலர்ந் ததிர்ந்தோர் மம்மர் நோய்
புலந்தன வாஞ்செழுங் காந்தள் பொருவில்
கொழுங்குமி ழினெடு மலர்ந்தளி தாய்மண
மல்கி யமைந்த பொலங்கொடி மன்னே.

தாழிசை.

(1) நான்முகத்தோன் றனக்கமைத்த
 நவையுறுபொற் பினவாகும்
வான்முகத்தும் வளர்பொழிற்கண்
 வளர்வததா னுளதென்ரோர்
நூன்முகத்தும் வியப்புறவே
 நுவல்வதுமொன் றிலதாயும்

(2) வெண்டிரைப்பாற் கடல்பயந்த
 விழுமியதெள் ளமுதருந்து
மண்டர்தம ணியப்புவனத்
 தமைந்துளவைந் தருவகத்துங்
கண்டனனென் றொருபனுவல்
 கழறியதொன் றிலதாயும்

(3) தத்துதிரைக் கடல்வளைத்த
 தரணியினள் ளிடையாக
வைத்தவிரு சுடர்வலஞ்செய்
 வடவரையின் மருங்காய
உத்தரதிக் கினும்பனுவல்
 உரைத்துளதொன் றிலதாயும்

தனிச்சொல்.

எங்கோன்.

சுரிதகம்.

அருட்புயன் மாற னருவியந் துடரிப்
பொருப்பினுட் கண்டவற் புதத்தால்
மருட்கையின் வயத்ததாய் மகிழுமென் மனனே.

இது மூன்றடியாய்வந்த நேரிசை யாசிரியப்பாவா லிற்ற சுரிதகம். இது அகநிலை யொத்தாழிசைக் கலிப்பா. பகுதி—இயற்கை, துறை—காட்சி. அலங்காம்—உருவக வாய்ப்பட்டால் வந்த வுடனிலைச்சிலேடை. 1.

தரவு.

கோலாலங் குளிறுதிரைக் கெழுகடன்முற் றகன்ஞாலத்
காலால மிசைப்பவள வருவரையுங் கருவரையுந்
தமிதமியே பொன்றமா தருநீல நிறத்திறையுந்
 [தலையா
தமவெனவாங் கமைத்ததொழிற் றன்மையுடனொரு
 [திருநோக்கிற்
பெமதெமதென் றெதிருநரின் னுயிர்செகுத்தீய்த்
 [போழ்ந்த
கடைசிவந்து வரிபரந்து கவின்பெறுவார்குழை
 நுதாலால்
வடிபுரைமாண் மதர்மழைக்கண் மதிபுரைவா ணுறு

தாழிசை.

(1) இடந்தழுவுங் குனிசிலைக்கை
 யிகன்மறவர் தொடுகணையோ
டுடன்றெழிலோ சுடர்வடிவேற்
 குணவாத லொருதலையாற்
றொடர்ந்தெழுநின் றமரேற்சென்
 பகமாறன் றுணையடிசேர்
திடந்தழுவுந் ததியரெனத்
 தெறலருநன் கருளுவனே.

(2) வாட்டானைத் துறமறவர்
 வயிரவழற் பிழம்பொறிகட்
கோட்டானை யுடன்வரிலென்
 கூரிலைவே லவர்மார்பிற்
றீட்டானை வினையளிப்ப
 னுமரெற்றிவ் வியதுளபத்
தோட்டானைத் தொழுமாறன்
 றொண்டரினன் கருளுவனே.

(3) குளிர்மதிவான் முகடுரிஞ்சுங்
 கொடித்தேரின் குழுவினொடு
மொளிதிகழ்வன் படைமறவ
 ருடன்றெழில்வைந் நுதிவேலாற்
களிபயில்வெந் தொழில்புரிவ
 னுமரேல்வண் கருணைச
னளிபயினன் மகிழ்மாற
 னடியரினன் கருளுவனே.

இவை மூன்றும் நான்கடியாய் ஒருபொருண்மே லடுக்கி வந்த தாழிசை.

தனிச்சொல்.

எனவாங்கு.

சுரிதகம்.

காணுதி காணுதி கனலிதெற் கெழினுந்
தாணுவி னிலைதவ றினுந்தவ றுவுரை
குன்று சூழ்கூ ரம்பாற் கொடுநெறி
பொன்றுனி யழுங்கஉ ருறலே குதியே.

இது நான்கடியாய் நேரிசை யாசிரியப்பாவினுலிற்ற சுரிதகம்.

இது, தரவு, தாழிசை, தனிச்சொற் சுரிதகமென்னும் நான்குறுப்பினு மிழுக்கின்றாய் வந்த, வொத்தாழிசைக்

கலிப்பா. என்னே? "ஒத்தாழிசைக்கலி கலிவெண் பாட்டே, கொச்சகமுறமொழு கலி நால்வகைத்தே." அவற்றுள், ஒத்தாழிசைக்கலி யிருவகைத்தாகும். 'இடைநிலை பாடே தரவு போக்கடையென நடையயின் ஜெழுகு மொன்றெனி மொழிப'." என்பவற்ருனுணர்க. இதனே யாப்பருங்கலக் காரிகையார், நேரிசையொத்தாழிசைக் கலிப்பா வென்பர். அலங்காரம்—சுவையினுட் பெருமிதம். என்னே ? "கல்வி தறுக ணிசைமை கொடையெனச் சொல்லப்பட்ட பெருமித நான்கே." என்முராகலின். பகுதி—உடன்போக்கு. துறை—அடலெடுத்துரைத்தல். 2

தரவு.

அண்டரண்ட பகிரண்ட முழுவதுமீன் றகத்தடக்கித்
திரை
கொண்டபெரும் பாழினுக்கு ஞாங்காதாய்க் குளிறு
தோய்
மண்டுபெரும் புனல்விரைசைக் கப்புறத்தாய் மதிநலந்
தொண்டரினம் பேரின்பத் துறைபயிலந் தாமத்து
ருய்த்
எருணவிளங் கதிருதைய மலகிறந்தொன் றியதொன்
தளாய்
திருமணிமண் டபத்தினுளிந் திரையுடன்வீற் றிருந்

(1) இலகியவான் சுடர்விளக்கி
னெழுதருபல் பந்தமெனு
வுலகொருநான் கினுமதன்க
ணொருநால்வ ரெனும்படித்தாய்
நிலவலேயத் தடைவடைவே
நிரைத்துளதீ விருமூன்றுஞ்
சுலவியபாற் கடலரவிற்
றுயிலுவந்த வொருமுதலாய்.

(2) மீனுவ தாரமுதன் மேதினிமேல் வருகற்கி
தாஞக யுனக்குமொரு தந்தைதா யுளவெனலா
யூனுர்பைக் குரம்பையினே டுகந்தோறு முகந்தோறு
மாஞுதிங் கமைபருவத் தங்குமமை பவனுகி

(3) ஏழ்வகைத்தாய் நால்வகைத்தோற்
றத்திசைந்து மினத்துளதம்
மூழ்வகைத்தா யலம்போது
முயிர்கடொறும் பிரியாது
வாழ்வகைத்தாய்ப் புனல்சொரிந்து
மலர்தூவி வழிபடுதற்
காழ்கடற்பா ரடியவர்பா
லங்கங் கமர்ந்துளாய்

இவை மூன்றும் நான்கடியாய் ஒரு விகற்பத்தான் வந்த தாழிசை.

பேரெண் அம்போதரங்கம்.

(1)பேதைமையா ரிறந்துபிறந்துழல்வனெனப் பேதுரு
மூதறிவா ரழியாத முதல்வனெனத் தெரிந்துளாய்
(2)சாபத்தா விழுக்கமுருத் தலைமையாய்சாபமடைந்
தாபத்தா யினர்சரண மடைதருமாங் கருள்புரிவாய்

இவையிரண்டும் ஈரடியிரண் டம்போதரங்கம்.

அளவெண் அம்போதரங்கம்.

(1)வேதனுமுற் றுணர்வலெனிலறிவரியமேன்மையாய்
(2)ஆதரவுற் றிடுமெளியர்க் கறிவெளிய பான்மையாய்
(3)நினைபவர்தாநினைவுறுமவ்வுருவமதாய்வெளிநிற்பாய்
(4)அனைவருங்கண் டால்வியப்புற் றுசிபகர்ந்தெழு
[பொற்பாய

இவை நான்கு நாற்சீ ரோரடி யம்போதரங்கம்.

இடையெண் அம்போதரங்கம்.

திகிரியை யுயர்வலந் தரித்துளாய்.
திகழ்வரி வளையிடம் பரித்துளாய்.
புகர்முக மதமலை சொலச்செல்வாய்.
பொருமுத லையினுயிர் செலக்கொல்வாய்.
இரணியன் மார்பது பிளந்துளாய்.
இருநில மூவடி யளந்துளாய்.
அரணிப லார்கலி யடைத்துளாய்.
அதனிடை யேழ்மதிற் புடைத்துளாய்.

இவையெட்டு முச்சீ ரோரடி யிடையெண்.

சிற்றெ ணம்போதரங்கம்.

தேனிமிர் துளபத்தாய்.
செனனம துளபத்தாய்.
ஈனர திடமெய்தாய்.
எழுமெழு மரமெய்தாய்.
அலகையி னுயிர்கொன்றாய்.
அறனல தருகொன்றாய்.
உலகம துறுதுப்பாய்.
உரவிடை யடர்துப்பாய்.
மறைமொழி யினுமெட்டாய்.
வரைபொரு ளுரையெட்டாய்.
உறைதயி ரதுகட்டாய்.
உரைபுகழ் பலகட்டாய்.
அகன்மலே கவிகையுளாய்.
அழல்பெறு கவிகையுளாய்.
சகடம துதைமைந்தாய்.
தகவி னருண்மைந்தாய்.

இவை பதினறு மிருசீ ரோரடி சிற்றெண்.

தனிச்சொல்.

என வாங்கு.

சுரிதகம்.

பரத்துவ முதலாய்ப் பரந்துள வைந்தாய்
வரத்துடன் மூவுரு வாகிய வரத
திருக்குரு கூரநின் றிருவடி வழுத்துது
மெங்கோன் றிருமகிழ் மார்பின னியற்றமி
ழூழிதொ றாழியெவ் வுலகினும்
வாழிய தாக வளர்க்கநீ யெனவே.

இஃ தாறடித்தாய் நேரிசை யாசிரியப்பாவினு லிற்ற சுரிதகம். இது, தரவு, தாழிசை, யெண், தனிச்சொல், சுரிதகம், என்னுமைந்துறுப்பினுல் வந்த, வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா. என்னே? "வனையொன்றே தேவர்ப்பரசு முன்னிலைக் கண்ணே," "அதுவே, வண்ணக வொருபோ கென விருவகைத்தே", "வண்ணகந்தானே தரவேதாழிசை யெண்ணே வாரமென் றந்நால்வகையிற் ருேன்று மென்ப" "தரவேதானு நான்கு மாறு மெட்டுமென்ற நேரடிபற்றிய நிலைமைத்தாகும்". "ஒத்து மூன்ருகு மொத்தாழிசையே'. ஒத்ததாழிசையை ஒத்தாழிசை யென்றது வினைத்தொகை' "அடக்கியல் வாரந் தரவோ டொக்கும்", "முதற்ருெடை சுருங்குமன் னெண்ணே, யெண்ணிடையெழுதலேதமின்றே சின்னமில்லாக் காலையான" என்பவற்ருனுணர்க. இவ்வாறு வரும் வண்ணக வொத்தாழிசையினுள் இருசீ ரோரடிச் சின்னம் பதினறு மொருசீ ரோரடியாய் வருவனவுமுள, அவை.

உறைபதி யுடனயனே யுந்திப்பாற் படைத்தோயு
மறைகடல்சூழ் நிலமுலா யனைத்துலகும் புரப்போயும்

என்னும் வண்ணக வொத்தாழிசையினுள் மூன்றடித்தாழிசை மூன்றும்,

வானுநீ நிலனுநீ மதியுநீ விதியுநீ
தேனுநீ யமிர்துநீ திருவுநீ வுருவுநீ
அன்புநீ அருளுநீ ஆதிநீ அந்தநீ
இன்பநீ துன்பநீ இன்மைநீ உண்மைநீ,

எனச் சின்னம் பதினறும் ஒருசீர்ச் சின்னமாக வந்தவாறு காண்க. "கடலருமா முனிவர்" என்னுங்கலியுள் முச்சீரோரடி இடை யெண்ணினேயும் இருசீரோரடிச் சிற்றெண்ணினேயும் ஒரு சாராசிரியர் இருசீரோரடியாகவும், ஒரு சீராகவும் அளபெழாமல் அமைத்தவாறுங் கண்டு கொள்க. இவ்வாறு வரும் வண்ணக வொத்தாழிசையினே ஒருசாராசிரியர் அம்போதரங்க வொத்தாழிசை யென்று கூறுமாறு முணர்க. 3

ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

179055

4. மண்ணிற் கோரு கண்.

334 பக்கத் தொடர்ச்சி

தன்னலோன்றில் கணையம் தொடங்கியது. இடித்த பேரிகைக் கெதிர் காளமும் பிளிறி, ஆடிய கொடிகள் அலையெனப் புரளக் கடலொடு இகலிக் கடல்கிளர்ந்தாலென்ன இருதிற வருதினியும்மோதிப் புக்குக்கடும் போர் புரிந்தன. களிறொடு களிறு கை தெற்றிச் சாய்ந்தன. தேரொடு தேர் கால் முட்டித் தகர்ந்தன. எறிவேல் பறந்தன. தொடுகணைகளை விடுதொடைகளால் விலக்கினர் வீரர். கார்முகம் வாங்குநர் நாணெறிந்து அழித்தனர் சிலர். சராசனம் சொரிந்த சாயக மாரியைக் கவண் எறிந்த கற்களால் தாக்கிப் போக்கினர். வாளாற் போழ்ந்த வாசிகள் விழுந்தன. யானையின் அடிகளை உலக்கையால் மோதினர். கொடுமரம்உடைந்தவர்நெடுவாள்ஏந்தினர். நிறத்தில் தைத்த தோமரந்தன்னைப் பறித்துப் பொருதனர் ஆயுதமிழந்தவர். சந்தனம் துறந்தவீரர் எருவைமேல் தாவினர். துரங்கம் இழந்த பொருநர் தேரினூடு புக்கனர். கண்ணழிந்தவர் காளமூதினர். காலுடைந்தவர் கொடிகளைத் தாங்கினர். கைஇழந்தவர் வாயினிற் பற்றிய வாளொடு வெம்படை யுழுதனர். தலையொடு தம் கடன் இறுத்த வீரர் தாண்டவம் ஆடினர். கொக்கரை தெறித்த நாண் செல்லெனக் குமுறிப் புங்கமாம் தாரைபெய்யக் களமெலாம் குருதிவெள்ளம் தழைத்தோடலாயிற்று. வாசவன்மீது படப்பட வரும் படையெலாம் விலக்கிச் சாரதியுந் தேர்த்தொழில் சாகசங்கள் காட்டி நடத்தினன். பகைவர்தம் படையிலோ புஜங்கன் புக்கவிடம் தெரியவில்லை. தந்தாவளி மீதமர்ந்து சரபசூரன் சமராட்டிச் சுழன்றான். இருபுறத்திலும் பொருநர் எண்ணிறந்தோர் பட்டு மாய்ந்தனர். வெற்றியும் தோல்வியும் யாருக்கு உற்றதெனச் சொல்லவோ வகைகாண்ப தரிது. வெங்களமோடிய வீரர் தம் செய்த்தோரில் படிந்தெழுந்தான் என்ன அருக்கனும் சிவந்து தோன்றினன். நீட்டினல் வெட்டுவர் இவ்வெங்கண் வீரர்தாம் என வெருவி எல்லியும் தன் ஆயிரங்கரங்களை ஒடுக்கி அத்தமனகிரிக்கப்பால் ஓடியே போகப், பாறும் கழுகும் ஆண்டலைப்புள்ளும் நாற்றிசைநின்றும் வந்து காவலமிட்டன. முதல்நாள் போரும் முடிவடையும் நிலையி லிருந்தது.

அந்தச் சமயம் கடாரக்குதிரைவீரர் ஐம்பதின்மர் தம்படைநின்று பிரிந்து தாவி, இமைப்பதன்முன்னே வாசவன் அமர்ந்த தேரை, வளைத்தவில்லினர் வாள் விளங்கு கையினர் சூழ்ந்துகொண்டனர். இக்குதிரைகளுக்குப் பின்னே பின்னும் சில தேர்களும் யானைகளும் விரைந்து வந்து மதிலெனவளைந்து வாசவற்கு உதவியாகித் துணைப்படை நெருங்காவண்ணம் எதிர்முகமாய்ச் சமர்செய்து தடுக்கலாயின. ஆதலால் அங்கதன் சங்கம் ஊதி உதவியழைத்ததும் பயனிலாது போயிற்று. எனினும், சூழ்ந்தவர் கருத்தில் கொலையிலதென்று அவர்தம் முகத்தால் உணர்ந்தனன் பாகன். அன்னதற்குள் சூழ்ந்தடர்ந்த பரிப்படை வீரன், "வாசவ, உன்னைச் சிறையாக்கினேம். முரண் கொளாது நீ அமர் ஒடுங்கி எம்முடன் வருவாய்," என்னுமளவில், இளவலும் எதிர் இயம்பாது தன் சிலையையே குனிக்க, "ஐய, நின் னுயிர்பால் நசையுண்டாயின் சிலைகோலிச் சமர்செய்தற் கெண்ணற்க. நின்னைக் கொன்றிடாது பிணித்துப் போவதே எம தாணை. எனினும் நீ தோணியேவி வறிதே சினந்தூண்டினல் இத்தறுகண் படையாளர் யாது செய்வரெனச் செப்பலரிது," என்று மீண்டும் சாற்றினன். அன்னதற்குக் கோமகன், "மறவோய், நும்மிற் பதின்மரேனும் மாய்த்தபின் மாள்வெனன்றோ!" என ஆசுகத்தைச் சாபத்தில் பொருத்தினன். அங்கதனே அக்கணமே "அரசே, ஆவியும் நினதன்று; வாளா மாள்வதோ வீரம்!" என்று அத் துரோணத்தை அவன் கையிலிருந்து தட்டிப்பறித்துக் கொண்டான். பகைவருள் மற்றொருவன், "உதவிக்கு நீ உன் சங்கை ஊதியூதி வாய் வலித்தாய். நின் பொருநர்தம் ஆயுதங்களைத் தரையிலிட்டு, மடிதலின்றியே பின்னிடச் சங்கநாதம் செய்வதன்றி வேறுகதி இல்லை கண்டாய்!" எனச் சிரிக்கவும், வாசவன், "அட, பதரே, ஏமாங்கதத்திளவரசை உயிருடன் பற்றிப்போகும் ஆற்றலர் நீவிரோ! தவர்துறந்த வெறும் கையனுப் நான் இருத்தலால் இவ்வுரை செப்பினுய். ஒன்னார்க்கே உறவாயினன் என் பாகனும்போலும்! ஆயினும் என்! நட்டார்க்கு உற்ற துணையாய் என்பால் கட்கம் உளது. நுந்தம் ஊனிடை அதனுல் உழுது நமனை விதைக்கின்றேன், கண்டிரும்," என இரதமிழிந்து எதிர் நின்ற தானையுள் பாய்ந்தனன். அஞ்சா இவன் மடமையைக் கருதி அதிசயந்தோன்ற வாய்மடித்துத் திகைத்த அப்பகைப்படையாளர், அதிசயத்தின் மேல் அதிசயமாய்த் தேர்முனையில் வீற்றிருந்த பாகன், சிக்கெனத்தாவி அத்தேரின் சிகரம்மீது வாங்கிய வில்லில் வைத்ததோர் அம்பொடு நிற்கக் கண்டார். கண்டவர், 'கழைமேல் நடிக்கும் கூத்தனும் ஆயினன் மற்றிப் பாகன்' என இளிவரச் செப்பி வாசவனைப் பாசத்தால் பிணிக்கப் புக்கனர். அப்போதினில் வையத்தின் உச்சியில் இருந்தவாங்கே அங்கதன், "படர்காள், தீண்டன்மின்! என்னிறையைத் தீண்டன்மின்! வாசவ, நீயும் அக்கத்தியைத் தாழ்த்தி நில்!" எனப் பதறிக் கூவினன். "விழுங்கிய குழல்வழி ஊதுகின்றானே இவன்! குதிரையை உரப்பியோட்டும் குரலிற்கு இத்துணை இனிமை எங்கிருந்து அமைந்தது!" என்றனன் ஒருவன். "தேர்முடியில் பேடு ஆடுகின்றான்" என்றான் மற்றொருவன். "வில்தான் கரும்பாகி இல்லை" என வேறொருவன் கூறினன். "கரும்பை யெல்லாம் வாயிலே பிழிந்து கொண்டுளன் போலும்" என அயலொருவன் செப்பினன். இதற்கிடையில் ஒருவன், "இச்சிறியன் வெருட்டுதற்கு அஞ்சி நாம் சும்மா இருப்பதேன்!" என்று அருகு நின்றோரை இடித்து உரைத்தனன். இதுகேட்ட எல்லோரும், 'எடு எடு, பிடி பிடி' என ஆர்த்தனர். அதற்கு அங்கதனே, "நின்மின் நின்மின், எங்கோமகனைத் தீண்டுவீராயின் கொன்று வீழ்த்துவேன், சரதம்," என மாறித்தெழிக்க, முதல்பேசிய வீரன், "ஏ, வெள்ளைச் சிறுவ, தேருயரம் பாயாவோ எங்கள் சரம்?" என்று சினந்து கேட்டனன். சாரதியோ இச்சொற்களைச் சிந்தித்தவனுமல்லன். "ஓகோ கண்டேன்" என்று கூவினன். கூவி அவன், தூரத்தில் ஏதோ இலக்கு எடுத்த கண்வழி அம்பை நாட்டிச் சொல்லுவான்: "ஐயன்மீர், உந்தலைவன் சரபசூரன் அங்குக் கவசம் கழன்ற மார்பினனாய்ப் புஜங்கனுடன் அளவளாவி நிற்கின்றான். அவனுயிர் குடிக்கப் பல்லம் ஒன்று என் கையிற் கொண்டுளேன். இக்கணம் நீவிர் இவ்விடம் விட்டு அகலீராயின் அத்திரத்தை எய்தேன். அவன் மார்பினில் அது குளித்திடும் கண்டீர். யான் வைத்தகுறி யிதுகாறும் பிறழ்ந்திலது. தமியன் என்னுயிர் நும்வயம் இருப்பது உண்மையே! ஆயின் என்! என்மீது எய்வீராயின் எனதுயிரொடு கையும் நெகிழும்; கையொடு இவ்வடிகணையும் நெகிழுமன்றோ! உய்த்த இடம் அது போகவும் போகும். எளியன் யானும் என்னருங்குரிசிலும் மாள்வேமெனினும், எம்முயிர்க்கு வழித்துணையாய் ஐயன்மீர், கடாரப்படைத் தலைவனையும் கொண்டே ஏகுவோம். இனியென்; நான் ஆசுகம் எய்யவோ, நீரகன்று போவதோ, கருமம்?"

இக்கடுஞ்சொல் செவியுள் தைத்தலும் பகைவர்தம் வாயெலாம் சருகாய் உலர்ந்தன. கண்ணிமையாது அங்கம் சோர்ந்து நின்றனர். இதற்கிடையில், மேருவில் ஆடிய மின்னலெனவும், குன்றிலமர்ந்த குகவேள் எனவும், கனகபீடத் தமர்ந்த காமன்தன் சிலையே போலும் விளங்கிய அங்கதனது தோற்றம் கண்ட ஏமாங்கதத் தனிகத்துள்ளோர் ஊக்கம் மிகுந்து ஒன்றிய மனத்தினராய் வாசவனைக் கதுவிய படைப் பிரிவைப் புறத்தே அலைத்துழக்கினர். சந்தனக் குவடிருந்த சாரதியும், "ஏனின்னும் தயங்குகின்றீர்! சரபசூரனது உயிரிற்கு இறுதிதேடவே வந்தீரல்லீராயின் அம்மம்ம, இன்றே பறந்தோடுங்கள். நொடியும் முன்றே நுமக்குத் தந்தேன். அன்னதகனவயின் அகன்றிடாது நீர் தாழ்ந்தக்கால் தாழாது என் முனியும் நிமிர்ந்திடும்," எனவிளம்பி, 'ஒன்று,............ இரண்டு............மூ............ என்று எண்ணவும், மண்டலமிட்டிருந்த அவ்வணிவகுப்புள்ளோர் தம் குதிகாலைக் கும்பிட்டு ஓடலாயினர். கலைந்தோடும் படையைத் துரத்தி இத்திறத்து வீரர் உடனே தொடர்ந்தனர். அவ்விதம் தொடர்வோரை வாசவன், "வீரர்காள், இரியல்போகும் இம்மாக்களை வெருட்டியோட்டுமின். எனினும் பகழிகள் தூவி அவர் வெரின்தனில் புண்படுத்த வேண்டா. பட்டோர் தோலினும் புகழினும் அப்புண் ஆறினும் ஆறலாம், எய்தவர் ஆண்மைக்கு அதனால் உற்றிடும் பெருவடு என்றுமாறுது!" என்றழைக்க இவ்வீரர் கடாரப்படையை நெடுந்தூரம் உய்த்துக் கழித்து மீண்டனர்.

புஜங்கன் மனத்திலும் போர்க்களத் திடையிலும் ஒருங்கே பாயிருள் சூழ்ந்தது. மாண்டவர்க் கிரங்கிப் பரிவால் அவர்முகம் பொருந்தப் பார்த்துப் பெருமூச்செறிந்தனராய் அருந்திறல் படைஞரெல்லாம் தத்தம் பாசறை யடைந்தனர். கடும்போர்க்கு அஞ்சிக் கரந்தே கிடந்த உடுக்கள் எல்லாம் ஒன்றொன்றாகித் தோன்றியும் மறைந்தும் கூசிக்கூசி விசும்பில் கூடின. விளிந்தோர் களத்திடை கிடக்கவும் மிகுந்தோர் பாளையத்தில் துயிலவும் நள்ளிரவு ஆயது. பாசறைக் காவலாளர், போந்தவர் எவரெனக் குழூஉக்குறி கேட்டு உரப்பும் ஒலியும், புலாலொடு எலும்பை மென்ற ஓரிகள் ஆக்கிய ஒலியும் அன்றி ஒலியுமில்லை. தாரகை சிந்திய ஒளியும் வாரண மருப்பின் பிதிர்ந்த நித்திலத் திரள்தாம் கான்ற நிலவு மல்லாது வேறு ஒளியுமில்லை. அன்ன நிசியில் கண்படாது உழன்றவர் இருவர். ஊழ் உறுதபோது உலகாளும் ஆவல்கொண்ட புஜங்கன் அப்பக்கம்; கலைமகளருளிலாது கவிபாட இச்சித்த சாபாலன் இப்பக்கம்.

இராசமா புரத்திலிருந்து புறப்பட்ட படைதனைத் தொடர்ந்து போந்த பண்டம் ஏற்றிய வண்டியொன்றில் குடிபுகுந்த சாபாலன், வழி முழுவதும் எலி அரிப்பதுபோல் கிறுக்குகிறுக்கென்று ஓலை ஓலையாய்ப் பரணியின் பகுதியாய படையெழுச்சியைக் கீறிக்கொண்டே வந்தான். மனம்போன படியெல்லாம் இப்புலவன்பாடியபாசுரங்கள், அவன்கைபோனபடியெல்லாம் ஏட்டினில் பதிந்து கிடந்தன. நாட்கள் சிலவாகிக் கவிகளின்ஓராயிரம்முடிந்ததும், ஆனவரையிலும் தன் பரணியை எவர்க்கேனும் படித்துச் சொல்லவேண்டும் எனும் ஆசை சாபாலனுக்கு உண்டாயிற்று. ஆனால் வண்டியை ஓட்டி வந்த ஆள் ஒருவனே இவனுக்குச் சகவாசியாய் அமைந்திருந்தானதலால் புலவனும் தன் கவிகளை அவனுக்கே படித்துச்சொல்ல எண்ணினன். வண்டியோட்டியோ இக்கவிகளைக் கேட்கச் சம்மதிக்கவில்லை. பாசுரங்கள் நாலைந்து படித்தாவதற்கு முன்பே இவன், "இதைக் கேட்கமாட்டேன்" என்று அடியுடன் மறுத்து விட்டான். புலவனுக்கோ கேட்போன் ஒருவன் வேண்டும். நால்வகை உபாயங்களில் தான மார்க்கத்தை அநுசரித்துச் சாபாலன், மறுமுறை தன் ஏட்டைப் பிரிப்பதன்முன், வண்டிக்காரன் கையில் இரண்டொரு பணத்தை வைத்துவிட்டு வாசிக்க ஆரம்பித்தபோது அவன் சும்மா இருந்ததால், அதன்பிறகு ஒவ்வொரு வேளையும் படிப்பதற்கு முன்னும் பின்னும் அவ்வண்டியோட்டிக்குச் சாபாலன் பொருள் சிறிது கொடுக்கின்ற வழக்கம் உண்டாயிற்று. இன்னவிதம் நாட்களும் புலவன் கை நாணயமும் பலவாகக் கழியினும் பரணியின் ஒரு சிறு பகுதியே படிக்க இயன்றது. சாபாலன் தலையெழுத்தினும் கோணலாய் அவ்வேட்டின் எழுத்து அமைந்திருந்த காரணத்தால் பெரும்பான்மை இப்புலவன் எழுத்தைக் கூட்டிக்கூட்டிப் படிக்க முயல்வதிலேயே நேரமெல்லாம் தொலைந்திட, வண்டிக்காரன் தான் பெறும் கூலிக்கேற்ற கஷ்டம் கேட்பதில் இல்லையென்று மனத்துள் மகிழ்வான்: இருந்தாலும் ஒவ்வொரு சமயம் மாடோட்டுபவனுக்கும் ஆற்றுதபடி சில செய்யுள்கள் இடையிடையே வந்து சேரும். நிகரற்ற தன் உவமைகளால் அலங்கரிக்கப்பெற்ற பாட்டை இப்புலவன் படிக்கும்போது வண்டிக்காரன் தனது எரிச்சலையெல்லாம் மாட்டின் முதுகில் தன் கைக் கோலால் எழுதிவைப்பானல்லாது வேறு என்ன அவனால் செய்ய இயலும்.

* கொக்கெனக்குமார்தாமுங்கால்களேநீண்டமுதலை
யொக்குமத்தூங்கமாவுமொட்டியகறையான்புற்றின்
மிக்குயர்தேருங்கந்துள்போல்வனவேழங்கண்டோர்
பக்கெனப்பதைக்கவெறும்பின்பந்தியின்பறந்தவன்றே.

இந்தச்செய்யுளைச் சாபாலன்வாசித்தவுடன், காசுமாத்திரம்கொடுக்கின்றவனல்லாதவனால் அம்மாடுபட்ட அடி இவனும் பட்டேயிருப்பான்என்பதற்கையமில்லை. அடிபடாமற் போனாலும் இந்தப்பாட்டிற்கு அப்புறம் புலவனுக்குச் செலவோ அதிகமாயிற்று. "இத்தகைய பாசுரங்களின் புன்மையைக் கருதினால் அவைதமைக் கேட்கும் நான் தாழ்ந்த கூலிக்கே இத்தொழில் ஏற்றேன். கஷ்டத்திற்குச் சமமான கூலிபெறும் உரிமையெவர்க்கும் உளது. அவ்வுரிமையைக் கையாளாது ஒழிபவன் நானே!" என்று இவ்வண்டிக்காரன் தன்னுள் தேர்ந்து, "ஐயா, எனக்குச் சம்பளம் போதாது. அன்றுஅன்று நீ கொடுக்கும் பணமும் உனது இஷ்டத்தைப் பொருந்தியிருப்பதும் என் பெருமைக்கு ஒவ்வாது பாட்டிற்கு இத்தனை பணம் என்று திட்டம்செய்துகொண்டு அதையும் முன்னமே கொடுத்துவிட்டுப் புலவரே மேலிப் பரணியைப் படிப்பதானால் படி" என்று தன் செவிகளை அடைத்து விட்டான். கவிக்கும் வேறு கதியில்லை. சொல்பவர் உண்டானாலும் செவிதனில் கேட்கச் சிலர்தாம் இப்பேதையுலகில் காணலாம், என்பதை நினைத்துப் பாட்டைக் கேட்பதற்கு அவன் கேட்டவிலைக்கும் சாபாலன் ஒவ்வினன். தனது கவியின் நயங்களை யாருக்காவது சொல்லி அநுபவிக்கக் கொண்டிருந்த ஆசைக்கோ பார்க்கப்போனால் எதுதான் அரிய விலையாகும். மேலும் காக்கைப் புராணம் ஈட்டிய பொருள் ஒழிவதற்கும் ஒருவழிவேண்டுமே! முன்னமே அப் புராணஅபிமானிகளுக்கு இப்பொருளின் ஒரு பாதியைச் சுண்டித் தந்ததுபோக, மறுபாதியும் பாடிவந்த பரணிக்கு மூலதனமாய் அமைந்தது.

* இச்செய்யுளின் பொருள்:—கொக்கு என=கொக்குகளைப்போல, குமார்தாமும்=வாலிபவீரர்களும்; கால்களே கால்கள் மாத்திரமே, நீண்ட=நீண்டு இருக்கின்ற, முதலை முதலையை, ஒக்கும்=போன்ற, அ தூங்க மாவும்=அந்தக் குதிரைகளும்; ஒட்டிய=ஒட்டி ஒட்டிக் கட்டியிருக்கின்ற, கறையான்=செல்லினது, புற்றின்=புற்றைப்பேகுல், மிக் உயர்=மிகுந்து உயர்ந்திருக்கின்ற, தேரும்=தோகளும்; கந்துள்=பெருச்சாளியை, போல்வன=ஒத்த, வேழம்=யானைகளும்; கண்டோர்=இவைகளைக் கண்டவர், பக்கென=பக் என்று பயமுற்று, பதைக்க=பதைக்க, எறும்பின்=எறும்பினது, பந்தியின்=வரிசையைப்போல், பறந்த பறந்தன, (அன்றே, அசை. மூன்றும் அடியில் கந்துளம் என்பது ஈற்றுள அம் குறைந்து கந்துள் என்று நின்றதாம்.)

ஆனாலோ, கரும்பு தின்பதற்குக் கூலி பிடுங்கும் அந்தக் கயவன்பால் சாபாலனுக்கு உள்ளூறப் பற்றிப் புகைந்த கோபத்திற்கு அளவில்லை. இந்தச் செற்றம் வதிந்த மனத்தினனாய் இருந்த புலவன், அதனை மாடோட்டியின்மீது தீர்ப்பதற்குச் சமயமே பார்த்திருந்தான். பழிதீர்க்க நினைத்திருந்த இப் புலவனுக்கு ஆயுதம் அவன் பாசுரமே ஆதல்வேண்டும். எனவே, படையெழுச்சிப் பாகத்தில் தான் ஏறிச்சென்ற வண்டியையும் வர்ணித்து ஒரு செய்யுள் கட்டிச் சேர்த்தான்.

நாலுகான்மாடிரண்டந்தமாடிரண்டிற்கும்மொட்டை
வாலுமிரண்டேகொம்புங்காதுமிரண்டிரண்டேயாம் [மிலாத
தோலுதானுரித்தெடுத்ததெத்தனையோகொம்புவாலு
காலிரண்டுடையமாடடித்துதைத்தோட்டவோட்டவோட்
[டவே. *

என வையப் புகுந்த சாபாலன், யாப்பிலக்கணத்தின் எல்லைக்கு அடங்கியே வையவேண்டும் எனும் நியதியும் வைத்துக்கொண்டதாகக் காணவில்லை. ஒட்டகம்போல் இச்செய்யுளிற்கு ஒவ்வொரு உறுப்பும் கோணல். வண்டிக்காரனோ அலகிட்டுப் பார்த்தானல்லன். அவன் சொல்லிலக்கணத்தையும் சோதித்திலன். தன்னை இரண்டுகால் மாடென்று அப்புலவன் இச்செய்யுளால் பழித்தனன் என்பது அவனுக்குத் தெளிவாயது. இருப்பினும், பணமே பிரதானம் என்னுமத் தத்துவத்திற் கிணங்கி, வண்டியுய்ப்போன் பண்டிதனைப் புடைத்திடாது, பேன்த எருதுகளின் மூக்கு அறஅறத் தாம்பை வலிப்பதும், எருத்தம் நெளியநெளியக் கோலை ஓச்சுவதுமாய்த் தன் மனத்தில் பொங்கிய கோபத்தை மடைமாற்றித் தனது வருவாய்க்குக் குறைவில்லாமல் காத்துக்கொண்டான்.

இன்னவிதமாய் ஒருகட்டு ஓலையும் பண்டவண்டிப் பவனியும் இலக்கணசிகாமணி இலக்கியமகாகவி சாபாலப்புலவருக்கு முடிந்தன. பின், யுத்தமும் நிகழ்ந்தபோது இவன் நாடிய பொருள் கைகூடியதெனும் மகிழ்ச்சியோடு, அங்கிருந்த மரத்தின் ஓர் உயர்ந்த கொம்பிலேறி அமர்ந்தவனாய்ப் போர்தனில் நேர்ந்த செயல்களனைத்தையும் கண்டதைக் கண்டபடி பதிவுசெய்து, கட்டு இரண்டும் அவன் பரணியில் நிறைந்து போயின. இனி இவன், களம் பாடவேண்டும். அதற்காக இரவு சூழும்வரையில் காத்திருந்து அரவம் ஒய்ந்தவுடன் தீவர்த்தியொன்று கொளுத்திக் கக்கத்தில் செருகிக்கொண்டு எழுத்தாணியும் பனையோலையுமாய் நிணமும் சவமும் செந்நீரும் நிறைந்த வந்த வெங்களத்தின் நடுவண் எய்தினன். எய்தி, எண்ணுதற்கரிய பற்பல அணிகள் கூட்டித் தனது பரணிக்கு இலக்காகவே உயிர்நீத்து உடல் சிதைந்து கிடந்த அச் சவங்களின் தோற்றத்தைத் திறம்படத் தீட்டியவனைச் சாபாலன் சமைந்த அந்நள்ளிரவில், மறுபுறம் கடாரத் தண்டொடு தங்கிய புஜங்கனும் சும்மா இருக்கவில்லை.

* இதன் பொருள்:—நாலுகால்=நான்கு கால்களையுடைய, மாடு இரண்டு=இரண்டுமாடுகள் (இருக்கின்றன); அந்த மாடு இரண்டிற்கும்=அந்த இரண்டு மாடுகளுக்கும் மொட்டை வாலும் இரண்டே=இரண்டு மொட்டை வாலும் இருந்தன; கொம்பும் காதும்=(அவைகளுக்கு) கொம்புகளும் காதுகளும், இரண்டு இரண்டேஆம்=இரண்டு இரண்டு இருந்தன. (ஆனாலோ) கொம்பும் வாலும் இலாத=கொம்பும் வாலும் இல்லாத, கால் இரண்டு உடையமாடு=இரண்டுகால்கள் உடையமாடு (அதாவது அந்த வண்டி ஓட்டுபவன்), அடித்து உதைத்து ஓட்ட ஓட்ட ஓட்டவே=அடித்தும் உதைத்தும் ஓட்ட ஓட்ட, தோலுதான்=(அடிப்பதனால் அந்த வண்டிமாடுகளின்) தோலைத்தான், உரித்து=உரித்து, எடுத்தது=எடுத்தது, எத்தனையோ=கணக்கில்லை.

தமிழ்ப் பாடம் 72.

[நளவெண்பா.]

(377 பக்கத் தொடர்ச்சி)

கலி நீங்கு காண்டம்.

கார்க்கோடகன் கொடுத்த துகில்களை உடுக்கவும் நளன், வெம்பிக் கருகிக் குறுகியிருந்த தன் உருவம்மாறிப் பண்டை வண்ணமாய் நிற்கத் தமயந்தியும் மக்களிருவரோடு அவன் பாதங்களை வணங்கிபெழுந்த தன்மையை இனிவரும் நான்கு செய்யுள்கள் கூறுகின்றன.

மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோ ரருவினைபோற் போயிற்றே—அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு. 72

பதப்பிரிவு:—மிக்கோன் உலகு அளந்த மெய் அடியே சார்வு ஆக புக்கோர் அரு வினைபோல் போயிற்று அ காலம் கான் அகத்தே காதலியை நீத்து கரந்து உறையும் மான் நகம் தேர் பாகன் வடிவு.

அன்வயம்:—அக்காலம் கான்அகத்தே காதலியை நீத்துக் கரந்து உறையும் மான்நகத்தேர்ப் பாகன் வடிவு, உலகு அளந்த மிக்கோன் மெய்அடியே சார்வு ஆகப் புக்கோர் அருவினைபோல், போயிற்று.

பதவுரை

அ - அந்த
காலம் - காலத்தில்
கான் - காட்டின்
அகத்தே - இடத்திலே
காதலியை - தன் மனைவியை
நீத்து - கைவிட்டு
கரந்து - (உருவம்மாறி) மறைந்து
உறையும் - வசிக்கும், (அந்த)
மான் - குதிரைகளைக் கட்டிய
நகம் - மலைபோன்ற
தேர் - தேரினது
பாகன் - பாகனுடைய
வடிவு - வடிவானது (அரவரசன் கொடுத்திருந்த ஆடைகளை யணிந்தவுடன்);
உலகு - உலகத்தை
அளந்த - (மகாபலி சக்ரவர்த்தியின்பால் பெறுவதற்கு) அளந்த
மிக்கோன் - யாவரிலும் உயர்ந்தவனான திருமாலினது
மெய் - மெய்யாகிய
அடியே - பாதங்களை
சார்வாக - தமக்குத் துணையாக
புக்கோர் - தஞ்சமடைந்தவர்களுடைய
அரு - (விலக்குவதற்கு) அருமையான
வினைபோல் - கர்மங்களைப்போல
போயிற்று - அகன்றது.

விரிவுரை:—நளனைவிட்டுக் கலி நீங்கியதைக்கூறும் செய்யுள் அன்று இது. அதனை முன்னமே (49-வது செய்யுளில்) கூறிவிட்டார். நாராயணாப நம, என்று

அவன் அடியில் சேராரை வெந்துயரம் சேர்வது போல் நளனைக் கலி பற்றியது எனக் கூறிய புகழேந்தி, அக் கலி நீங்குவதற்கு, சந்திரன்சுவர்க்கியைச்சென்று அடைந்த பாவலர் பசிநீங்குவதை உவமையாக்கினர். ஆனல் இங்கு இவன் பழைய தன் அழகிய வடிவத்தை எய்தும் சந்தர்ப்பத்தில் முதல்உரைத்த உவமை தொடரலாகின்றது. உலகளந்தபெருமாள் தன் திருவடிகளே தமக்குத் தஞ்சமென அடையாமல் திரிகின்றவர்களைக் கொடிய துயரம் சேர்வது நிச்சயம். அப்படியே அவன் பாதங்களைப் பற்றினவனுடைய வினைகள் நீங்குவதும் நிச்சயம். வினைகளிலிருந்து நீங்கிய ஆன்மா தன்னுடைய பழைய மாசற்ற வோர் ஜோதிமய ரூபத்தில் நிற்கும். நளனும் இன்றைக்கு அவ்வாறே நின்றான்.

தாதையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீரரும்பப்
போதலருங் குஞ்சியான் புக்கணைந்து—கோதிலாப்
பொன்னடியைக் கண்ணிற் புனலாற் கழுவினன்
மின்னிடையா ளோடும் விழுந்து. 73

கருத்து:—தன் தந்தையை இவ்விதம் கண்ட இந்திரசேனன், இந்திரசேனையோடு அவன் பாதங்களில் விழுந்து கண்ணீர் சொரிந்தான்.

பாதித் துகிலோடு பாய்ந்தழியுங் கண்ணீரும்
சீதக் களபதனஞ் சேர்மாசும்—போத
மலர்ந்ததார் வேந்தன் மலரடியில் வீழ்ந்தாள்
அலர்ந்ததே கண்ணீ ரவற்கு. 74

கருத்து:—தமயந்தியும் தன்னுடைய துன்பக் கோலத்தைத் தாங்கிச்சென்று நளனுடைய பாதங்களிற் பணிந்தாள். அவளுடைய நிலையைக் காண நளனுக்குக் கண்களில் நீர் பெருகியது.

வெவ்விடத்தோ டொக்கும் விழியிரண்டும் வீழ்துயில்
அவ்விடத்தேநீத்த வவரென்றே-இவ்விடத்தே[கொள்
வாரார் முலையாளம் மன்னவனைக் காணுமல்
நீரான் மறைத்தனவே நின்று 75

பதப்பிரிவு:—வெம் விடத்தோடு ஒக்கும் விழி இரண்டும் வீழ் துயில்கொள் அ இடத்தே நீத்த அவர் என்று இ இடத்து வார் ஆர் முலையாள் அ மன்னவனை காணுமல் நிரால் மறைத்தன நின்று.

அன்வயம்:—வீழ் துயில்கொள் அவ்விடத்தே நீத்த அவர் என்று, வெம் விடத்தோடு ஒக்கும் விழி இரண்டும், வார் ஆர் முலையாள் அம் மன்னவனை காணுமல் இவ்விடத்தில் நீரால் நின்று மறைத்தன.

பதவுரை.

"வீழ் - (யாவராலும்) விரும்பப்படுகின்ற
துயில் - நித்திரையை
கொள் - கொண்ட
அ - அந்த
இடத்தே - இடமாகிய பாழ்மண்டபத்திலே
நீத்த - நீங்கிப்போன
அவர் - அவனல்லவோ இவன்"
என்று - என்று நினைத்து,
வெம் - கொடிய
விடத்தோடு - விஷத்தை
ஒக்கும் - ஒத்திருக்கும்
இரண்டு - இரண்டு
விழியும் - கண்களும்,
வார் - கச்சானது
ஆர் - பொருந்திய
முலையாள் - முலைகளையுடைய தமயந்தி
அ - அந்த
மன்னவனை - நளவேந்தனை,
காணுமல் - பார்க்காதபடி
இவ்விடத்தில் - இப்பொழுது
நின்று - இடைவிடாமல்
நீரால் - கண்ணீரினால்
மறைத்தன - மறைக்கலாயின.

விரிவுரை:—நளனைத் தொழுது எழுந்த தமயந்தி கண்களில் நீர் பொங்கநின்றாள், என்பது இச் செய்யுளின் கருத்து. அன்றைக்குத் தூங்குகையில் சிறிதும் இரக்கமின்றி நடுவனத்திலொரு பாழ்மண்டபத்தில் தனியே விட்டுச்சென்ற இக்கன்னெஞ்சன் இன்று மீண்டானென்றால் அவனைக் கொண்டாட வேண்டுமோ! அவனைப் பார்க்கவும்படாது, என்று தமயந்தியின் கண்கள் கோபத்தால் அவள் அவனைப்பார்க்கா வண்ணம் நீராகிய திரையிட்டு மறைத்தனவாம். இயற்கையாகத் தமயந்தியின் கண்களில் நீர் பெருகுவதற்கு இப்படி ஒரு கருத்தைக் கவி கற்பித்து வைத்தலால் இது தற்குறிப்பேற்ற வணி.

இலக்கணம்.

இச் செய்யுளில், துயில்கொள் அவ்விடத்தே, என்ற தொடரில் கோள் என்பது, கொண்ட என்று இருக்கவேண்டிய பெயரெச்சத்தின், காலம் மறைந்த உருவத்தில் இருப்பதால் அது வினைத்தொகை. அவ்விதமே, ஆர்முலையாள், என்பதும் வினைத்தொகை. ஆர்ந்த என்ற பெயரெச்சம் காலம்கரந்து ஆர் என நிற்கின்றது.

இனிப் பண்புத்தொகையைப் பார்ப்போம். வெவ்விடம், என்று இந்தச் செய்யுளில் வந்திருக்கின்றது. இதனில் இரண்டு பதங்கள் புணர்ந்திருக்கின்றன. அவைகளைப் பிரித்தால் வெம்மை விடம், என்று ஆகும். வெம்மை என்னும் பண்புப்பெயர் புணரும் போது இங்கு வே என்று நின்றது. வெம்மை விடம், என்றால் என்ன அர்த்தம். விடம், என்னும்வருமொழியின் குணம் அல்லது தன்மையை,நிலைமொழி காட்டிநிற்கின்றது. இவ்வாறு குணத்தைக் காட்டுகின்றதென்பதைக் குறிக்கக்கூடிய சொல், ஆகிய என்னும் சொல்லாம். வெம்மை ஆகியவிடம், என்று இருக்க வேண்டிய அத்தொடரில் ஆகிய என்னும் பண்பைக் காட்டும் சொல் தொக்கு, வெம்மைவிடம்(இது பிறகு புணர்ச்சியால் வெவ்விடம் என்று ஆயிற்று; அதைப் பற்றி இங்குக் கவனிக்கவேண்டா) என்று நிற்பதால் இது பண்புத் தொகைநிலைத்தொடர். தண்ணீர், வெந்நீர், என்பன விரிந்தால் தண்மை ஆகிய நீர், வெம்மை ஆகிய நீர்,எனவிரியும். இப்படி இரண்டுசொற்களுக்கு மிடையே ஆகிய என்னும் பண்புருபு தொக்கு இருக்குமானால் அத்தொடர் பண்புத்தொகைநிலைத்தொடர்.

பண்பு என்றாலும் தன்மையென்றாலும் அர்த்தம் ஒன்றுதான். வருமொழியின் தன்மை இன்னது என்பதை நிலைமொழி காட்டி, அவ்வாறு காட்டுகின்றதென்பதைக் குறிப்பதற்கு வேண்டிய ஆகிய என்னும் சொல்லும் இடையே தொக்கு இருக்குமாயின், அப்படிப்பட்ட தொடர்களையெல்லாம் பண்புத் தொகை என்று கொள்ளுங்கள்.

ஒரு கடவுள், இருவினை, முக்குணம், நால்வேதம், ஐம்பொறி, அறுசுவை; என்பனவெல்லாம் பண்புத் தொகைகள். ஏனெனில், கடவுள் வினை குணம், முதலிய வருமொழிகள் அளவில் என்ன தன்மையை உடையனவா யிருக்கின்றன வென்பதை ஒரு இரு மூன்று, முதலிய நிலைமொழிகள் காட்டுகின்றன.காட்டும்போது ஒன்று ஆகிய கடவுள், இரண்டு ஆகிய வினை, மூன்று ஆகிய குணம், என்று சொல்லவேண்டியது அவசியமாதலால், அந்த அவசியமான சொல், ஆகிய என்பது தொக்கு இருக்கின்ற காரணத்தால் இத்தொடர்களைப் பண்புத் தொகைகள் என்கின்றோம். அப்படியே, கால்பங்கு, அரைவீசை, படிநெய், முதலிய போன்றனவும் பண்புத் தொகைகள் ஆகும்.

வில்லி பாரத விளக்கம்

ஆதிபருவம்

அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம்.

திருவேங்கட மலையை யெய்திய அருச்சுனன், திருமாலை வழிபட்டுப் பின்,வறிஞர்க்கு அன்னசாலை முதலியவைகளை நிறுவி அறத்தைவளர்க்கும் வள்ளல்களும், விடையோனொரு பாகம் கொண்ட பச்சைக்கொடியும் உறைகின்ற கச்சிப்பதியாகிய காஞ்சி நகர் வந்து சேர்ந்தான்.

374 பக்கத் தொடர்ச்சி

'இச்சைப்படி தன்பேரற மெண்ணான்கும் வளர்க்கும் கச்சிப்பதி' என்று வில்லி சொல்வதால், காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டும் மஹாபலிபுரத்தைத் துறைமுகமாகக் கொண்டும், தங்கள் கப்பற் படையால் இலங்கையைவென்று வாகை சூடியவரும் கிபி இரண்டுமுதல் ஏழாம் நூற்றாண்டுவரையில்ஆட்சி செலுத்தித் தென்னிந்தியாவில் இப்போது காணப்படும் சிறந்த சிற்பவேலைகளமைந்த கோபுரங்களை அமைத்துப் பிறருக்கு வழிகாட்டினவரும், காஞ்சி நகரத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஆதுலர்க் குச்சாலையும், ஓதுவார்க்குணவும், பசுவுக்கு வாயுறைகளும், தற்காலத்திய நாகரிகத்துக்கே ஏற்றதென்று பிழையாய்க் கருதப்பட்டிருக்கும் மகப்பெறுவித்தல் மகவு வளர்த்தல், மகப்பால் வார்த்தல் முதலிய சிறந்த அறங்களும் தாபித்துக் காஞ்சியை மதுரையொடும் காசியொடும் ஒப்பவெண்ண உயர்த்தியவரும் ஆகிய பல்லவ அரசர்களின் பெருமையை எடுத்துக் கூறியவாறாயிற்று.

அத்திகிரியென்னும் மலையை யடைந்தபின் அருச்சுனன்

பெற்றாள்சக தண்டங்க ளனைத்தும்மவை பெற்றும்
முற்றாமுகிழ் முலையாளொடு முக்கண்ணர் விரும்பும்
பற்றாமென நிக்கோரிகழ் பற்றென்றினு முண்மை
கற்றார்தொழு மருணாசல மன்பொடு கைதொழுதான்

[தோன்றியழியும் அண்டங்களை யெல்லாம் பெற்றும் தன்னிளமை நீங்கப்பெறாத பார்வதியம்மையோடு கூடிய முக்கண்ணரான சிவபெருமான் விரும்பி வீற்றிருக்கும் பற்றுக்கோடுடைய தானமானதும், உயர்ந்தோரால் இகழப்படுகின்ற பாசம் வந்தடைந்தாலும் உண்மைக் கல்வியாளர் தொழுமிடமானதுமான திருவண்ணாமலையை அன்போடு கைத்தொழு தேத்தினான்]

சகதண்டம் என்பது சகத் அண்டம் எனப்பிரிந்து தோன்றியழியும் தன்மையையுடைய அண்டம் எனப் பொருள்பட்டு நின்றது. மூப்புச் சாகாடு தேவர்க் கில்லையாதலால் பல வண்டகோளங்களைப் படைத்தும் கன்னியாயிருக்கும் உமையின் தன்மை போற்றப்பட்டது. பிறத்தற் கேதுவானதெனப் பெரியோரால் இகழப்படும் பற்று ஊழ்வினைப்பயனால் வந்தெய்தியவிடத்து, அது நீங்கும்படி அறிவுபடைத்தோரால் தொழப்படும் அருணாசலமெனத் திருவண்ணாமலையின் ஏற்றம் கூறப்பட்டது. கடவுளுக்கு ஏற்ற வடிவம் ஜோதிவடிவமே யாதலால், அன்னார்க்கு வேறு வடிவமில்லையென்று பிறருக்கு அறிவுறுத்தக் கந்தழி அழல்வடிவமாய் நின்றவிட மதுவாதலால் உண்மை கற்றார்தொழு மருணாசலம் எனச் சிறப்பித்துக்கூறப்பட்டது. மேலும் எண்ணினவளவில் முத்தியுதவும் தலமாதலால் உண்மையறிஞர் இருந்தவிடத்திருந்தே தொழுது அமலனையடைதற் கேதுவாகிய தலம்என்பதும் குறிக்கப்பட்டது. ஒன்றினும் எனும் உம்மையால் ஒன்றாவிடினும் தொழப்படும் தலம் என்பதும் பெறப்பட்டது. பற்று வந்தடையின் அது நீங்கும்பொருட்டும், அடையாவிடின் அது இனியென்றும் வாராமலிருக்கும்பொருட்டும் தொழப்படும் தலமென்க.

உருகுங்கமழ் நெய்பாலிரு பாலுங்கரை யொத்துப்
பெருகுந்துறை யேழேழு பிறப்புங்கெட மூழ்கிக்
கருகுங்கரு முகில்மேனியர் கவிஞானியர் கண்ணிற்
பருகுஞ்சுவை யமுதானவர் பாதந்தலை வைத்தான்.

[உருகுகின்ற மணங்கமழும் நெய்யும், பாலும் இருகரையிலும் சமமாகப் பெருகுகின்ற பெண்ணை நதியில் தன் பிறவி கெட மூழ்கி, கருநிறமுள்ள மேகத்தையொத்த மேனியையுடைய திருமாலும், ஞானசம்பந்தர் முதலிய ஞானிகளும் கண்ணிற் கண்டு களித்துப் பருகும் சுவை கொண்ட வமுதபோன்ற சிவனுடைய பாதத்தில் தன் தலையைவைத்துப் பணிந்தான்]

இவ்வாறு பொருள்கொள்ளின் இக்கவி மேற்சொன்னதிருவண்ணாமலையையேகுறிக்கும்.வெண்ணெயுருகுவதற்குள் பெருகும் பெண்ணையாற்றின் வெள்ளத்தில் வனிதையர் நெய் பால் முதலியன விடுதலியல்பு. திருமால் பருகும் சுவையமு தானவ ரென்பது, அடியைத் தேடிக் காணாதார்க்குப் பின் ஐயன் காட்சி யளித்ததைக் குறித்து நிற்கும். 'ஓரேனந்தனைத் தேடவொளித்தருளு மிருபாதத்தொருவனந்த போரேனந் தனைத்தேடிப் புறப்பட்டான்' என்ற பின்னால் அருச்சுனன் தவநிலைச்சருக்கத்தில் கூறுகிறாராதலால் இவ்விடம்திருமால் ஆர்வத்தோடு அரனைப்போற்றினர் என்று வில்லிசொல்லியது,முன்தோற்றுவாயில் கூறியபடி வில்லியின் சமரசக் கொள்கையைக் காட்டி நின்றது

இனி, மேற்கவியில் திருவண்ணாமலையைப்பற்றிச் சொன்னதனால் இக்கவி திருக்கோவலூரைக் குறிக்கின்றதோ எனும் ஐயப்பாடு எமக்குண்டு. திருக்கோவலூர் பெண்ணையாற்றின் கரைமேல் நிற்கிறது. கருமுகின் மேனியர் அமுதானவர் என்று கூட்டித் திருமாலைக்குறித்தது என்னலாம். கவிஞானியர் என்பது அப்போது அத்தலத்தைப்பற்றிப் பாடிய திருமங்கையாழ்வார் முதலிய ஆழ்வார்களைக் குறித்து நிற்கும்.

ஐயானன னியல்வாணனை யடிமைக்கொள மெய்யே
பொய்யாவண மெழுதும்பதி பொற்போடு வணங்கா
மெய்யாகம வதிகைத்திரு வீரட்டமு நேமிக்
கையாளன கீந்திரபுர முங்கண்டு கைதொழுதான்.

[சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரை அடிமைக் கொள்வதற்கு உண்மையாகவே பொய்யோலை யொன்று எழுதிவைத்துக்கொண்ட திருவெண்ணெய் நல்லூரை வணங்கி, உண்மை யாகமத் திருவதிகைத் திருவீரட்டானமும் கண்டு, சக்கராயுதத்தையுடைய திருமாலுறையும் திருவகீந்திரபுரமும் கண்டு தொழுதான்]

இச்செய்யுளில் சிவனடியார் திருக்கூட்டத்தைப் பற்றி மொழிந்தும் சைவாகம நெறிவழுவாமல் சிவனைப் போற்றியு மிருப்பதை நோக்கில், எவ்வாற்றானும்

கர்ணபரம்பரையில் வழங்கும் கதைகள் உண்மையல்லவென்று நமக்குத் தோன்றுகின்ற தல்லவா? இந்தச் செய்யுளில், மெய்யே பொய்யாவண மென்பது முரண்விளைந்தழியும். திருவகீந்திரபுரம் என்பது இப்போது திருவேந்திபுரம் என்று வழங்கும் தலமாயிருக்கலாம். இவ்வாறே சிதம்பரம் ஸ்ரீரங்கம் மதுரை ஆகிய தலங்கள் கூறப்பட்டன. ஸ்ரீரங்கம், 'பூதல மங்கைக் கலங்கார மளிக்கும் தென்னரங்கம்' என்று உயர்த்திக் கூறப்பட்டது.

மதுரையில் நுழைந்த பார்த்தன் மன்னவனுக்கு ஆசிகூறலும், அவனிவனை "யெந்நிலத்தீ ரெப்பதியீர் எத்திசைக்குப் போகின்றீர்" என்று கேட்டான். அதற்கு,

'கன்னியைக் கண்ணுற் றுடவந்தன மென்றனன்
மெய்ம்மைக் கடவுள் போல்வான்'

கன்னியா குமரியைக்கண்டு அதில் படிய வந்தேன் என்றும், உமது கன்னியைக் கண்டு அவளை மணக்க வந்தேன் என்றும் சிலேடையாய்ப் பொருள் படக் கூறினன் அருச்சுனன்.

மதுரையைப்பற்றிக் கூறுமிடங்களிலெல்லாம், நான் மாடக்கூட லென்று பாராட்டினர். 'மகபதி (இந்திரன்) முடியில் வளையெறிந்து மீண்டவனென்றும், அரியுடனே (இந்திரன்) யோராசனத்தில்வைகினோன் என்றும், 'மகோததி (கடல்) யும் வணங்குந் தாளான்' என்றும், திருவிளையாடற் புராணத்தில் செப்பியிருக்கும் செயல்களைக் காட்டியும், மதுரை மன்னர் வீரச் செய்கைகளைச் சித்திரவாகனன் மேலேற்றியும் கூறியிருக்கிறார்.

அதன்பின் அருச்சுனனை யொரு காவி லுறையப் பணித்தான் மதுரைக்கோமான். சித்திராங்கதை அவ்விடத்திற் றன் றோழிமாருடன் றோன்றிப் பத்திரமு நறுமலரு மவயவம்போல் விளங்குவன பலவுங் கொய்து ஒரு செய்குன்றின்மே லேறினள். இந்த வுவமையை வில்லி அடிக்கடி யெடுத்துச்சொல்கின்றார். பின்னால் காண்டவதகனச் சருக்கத்திலும், 'ஆராமந் தொறுந் தங்க ளவயவம் போல்வன கொய் தாரணங்கு போல்வார்' என்று இதே கருத்தை வெளியிட்டிருக்கிறார். மேன்மை, அழகு இவைகளால்மாதரவயவங்களுக்கும், தளிர் மலர்களுக்கும் உவமை கூறப்பட்டது.

அக்குன்றின்மேல்

வண்டானந் திரிதடத்து வரிவண்டி
னினம்பாட மயில்க ளாட
தண்டார்மெய்க் கிளிக்கூட்டஞ் சான்றோர்க
ளுரைபயிற்றத் தமிழ்கண் மூன்றுங்
கொண்டாடி யிளம்பூவைக் குழாந்தலைசாய்த்
துளமுருகுங் குன்றி னுங்கட்
கண்டாளக் குமரனைத்தங் கொடிக்கயலைப்
புறங்காணுங் கண்ணி னாளே.

[வண்டானமென்னும் நாரை திரிந்து, இசையையுடைய வண்டின் கூட்டங்கள் பாடவும், மயில்களாடவும், தங்கள் கழுத்தில் தோன்றும் ஆரத்தையுடைய கிளிக்கூட்டங்கள் பெரியாரொடு பழகியதால் அவர்கள் நல்லுரையையே பேசவும், நாகணவாய்ப் புள்ளின் கூட்டம் தமிழைக்கொண்டாடி அதன் சிறப்புத்தோன்றத் தன்தலையைச் சாய்த்துப் பாடவும் இராநின்ற குன்றிலே கயல்மீனைத் தோற்கடிக்குங் கண்ணினள் அருச்சுனனைக் கண்டாள்]

பூவைக்குழாம் தலை சாய்த்துப் பாடினவென்று இயற்கைத் தோற்றத்தை வருணித்தது ஆங்கிலக் கவிகளை யொத்திருக்கின்றது. அண்ணலும் அவ்விடம் அவளை நோக்கினன். நோக்கவே,

செந்திருவை யனையாளுந் திருமாலை
யனையானுஞ் சிந்தை யொன்றாய்
வந்திருவர் விலோசனமுந் தடையின்றி
யுறவாடி மகிழ்ச்சி கூர்ந்து

இருவர் கண்களும் தடையின்றி யுறவாடின. அன்பினால் பிணிக்கப்பட்டு அவ்விருவர் கண்களும் கம்பர் சொல்லியதுபோல் ஒன்றையொன்று கவ்வின. அவர்களும் மாறிப்புக் கிதயமெய்தினர். அருச்சுனனும் அவளை மணந்து பப்புருவாகனைப்பெற்று, அவளைத் தாதைபா லளித்துச் சேதுதரிசனம் செய்யச் சென்றான்.

வன்றிரைவெங் களிற்றினங்க ளிரண்டுபாலு
மலையாம லிடுங்கணைய மரமே போலுந்
தன்றலைக ளமிழாம லெடுப்பான்மேருத்
தாழ்கடலி னீட்டியதோர் தடக்கை போலு
மன்றியிரு பூதலமு மிருதட்டாக
வகத்தியன்வாழ் குன்றினையு மணிமுக் கோணக்
குன்றினையுஞ் சீர்தூக்கி நிறுப்பதாகக்
கோகனத னமைத்ததுலைக் கோலும் போலும்

[வலிமை பொருந்திய அலைகளாகிய யானைக்கூட்டங்கள் இரண்டு பக்கங்களிலும் சண்டையிடாமலிருக்கும்பொருட்டு நடுவே போடப்பட்ட அணையைப்போலும், மேருவானது மேனாள் வாயு பறித்தெறிந்த தன் சிகரங்களைத் தூக்கி நிறுத்த நீட்டிய விசாலமான கையைப்போலும், இந்தியாவும் இலங்கையும் துலாக்கோலின் இரண்டு தட்டுகளாகவும், பொதிய மலையையும் அழகிய திரிகோணசலத்தையும் அத்தட்டுகளிலிட்டு நிறுக்கப் பிரம்மா அமைத்த துலாக்கோல் போலு மிருந்தது அந்தச் சேது.]

இந்தியக்கடலும் அராபிக்கடலும் கூடுமிடம் கன்னியாகுமரி முனையேயாயினும், சேதுவைச்சென்று காணின் இப்பெருங்கடலும் அவ்விடத்தேயே கூடுவதுபோற் காணப்படுகிறபடியால் இருவகை அலைகள் ஒன்றற்கொன்று முட்டி மோதாம லிடப்பட்ட அணையதுவென்று அழகாய்ச் சொல்லப்பட்டது. அலைகள் தங்கள்நோன்மையால் மரக்கலங்களையுடைத் தெறியு மியல்பினவாதலால் களிற்றினங்களுக்கு ஒப்பிடப்பட்டன. மேலும் கைமா மதங்கொண்டு கட்டுக் கடங்காததுபோல், புயல்வீசுந் தருவாயில் அலைகளும் வெறிகொண்டனபோல் மீறி யழிக்கும் தன்மையனவா யிருக்கின்றன. இது பல்பொருளுவமையணி யென்பார்கள். ஆங்கிலத்தில் உருவகக் கலப்பு என்பதுபோல் பல எண்ணங்கள் இதில் சேர்த்துக் கலக்கப்பட்டன.

இறுதியில் அருச்சுனன் துவாரகாபுரி வந்து சேர்ந்தான். சுபத்திரையை யடைய அவ்விடம் திரிதண்டமேந்திய பொய்த்தவ வடிவங் கொண்டான். மங்கையர்பொருட்டு வேடம் பூணாதார் யார்? மெய்க்கோல மாற்றுவிடினும் பலர் இயற்கையை மறைத்தொழுகுகிறார்களன்றோ? அருச்சுனனும் ஓர் ஆலமா நிழலில் தங்கினன். அத்தருணம் கார்கால மானபடியால் அன்று சோனமாரியெனப் பெருமழை பெய்தது.

இந்திரற்குத் திருமதலை மன்றலெண்ணி
யாதவர்கோன் வளம்பதியி லெய்தினனென்
றந்தரத்தை நீலத்தால் விதானமாக்கி
யண்டமுற விடிமுரச மார்ப்பவார்ப்ப
வந்திரட்டை வரிசிலையாற் பஞ்சவண்ண
மகரதோரண நாட்டி வயங்கு மின்னான்
முந்துறத்தீ பமுமெடுத்துத் தாரைமுத்தான்
முழுப்பொரிசிந் தினகால முகில்களம்மா.

[இந்திரன் குமாரனான அருச்சுனன் வதுவை செய்து கொள்ளக் கோரி யாதவர் புரமான துவாரகை வந்தடைந்தான் என்று அந்தரதலத்தை நீல மேற்கட்டி யாக்கி, இடியாகிய பேரிகை அண்டத்தையளாவி ஆர்ப்ப, இரட்டையானவானவில்லால் பஞ்சவர்ணமான பூந்தோரணம்நாட்டி மின்னலினால் தீபமெடுத்து, கார்கால மேகங்கள் மழைத் தாரைகளால் சிதையாத முழுப் பொரிகளைச் சிந்தி அவனை யுபசரித்தன]

இத்தற்குறிப்பேற்றவணி மிகவும் ஏற்புடைத்தாயமைந்திருக்கக்கண்டு மகிழாதார் யார்? தங்கள் தலைவனை இந்திரனுடைய மதலையைக் காணக் களித்து அவனை மழைக்குலம் இவ்வாறு உபசரித்தன. 'நீல விதானத்து நித்திலப் பூம்பந்தற்கீழ்' அமைத் துபசரித்தல் மிகவும் சிறந்ததாகும். இந்திரவில் இரட்டையாகியது ஓர் திக்கிலென்றேனும், கீழ்த்திசையிலும் மேற்றிசையிலு மொவ்வொன்றென்றேனும் கொள்ளலாம். இடியிடித்து மழைபொழிதல் நற்குறியன்று என்னாது அதனைச் சிறப்பித்துப் பாடியது கொண்டாடத் தக்கதே.

அருச்சுனன் தான்கொண்ட கருத்து நிறைவேறும் வண்ணம் துளபத்தாரோனை நினைந்தான். அடியார்க்கெளியனான அவனும் அவன் நினைவின்படி அவன்முன்தோன்றி யளவளாவிப் பின் மறுநாட் காலையில் வருவதாய்த் தெரிவித்துச் சென்றான். மறுநாள், இந்திரவிழாவென்று அருச்சுனன் தங்கிய விடத்தில் விழாவயர வாசவன் யாவரையும் ஏவினன். அவ்விடத்தில் 'முக்கோலுங் கமண்டலமுஞ் செங்கற்றாசு முந்நூலுஞ் சிகையுமாய் முதிர்ந்து தோன்றும், பொய்க் கோலங் கொண்ட முனிவனை' அனைவரும் வந்து வணங்கினர்கள். கிருட்டிணனும் அவ்வாறே மற்றவர்களோடு சேர்ந்து வந்து வணங்கினன்.

'மைக்கோல முகில்வண்ணன் றானுமெய்தி
மனவணக்கம் புரிவோனை வணங்கினனே'

தன்னை வணங்கும் கபட நாடகனைத் தானும் மானசபூஜைசெய்து மனத்தால் வணங்கினன் அருச்சுனன். சுபத்திரையும் அக்குன்றின் காவி லோர்புறம், மின்னிய பைம்புயலி னெழிலிரேகை போலும் வெளிப்படலும், அவளைக்கண்டு அருச்சுனன் சிந்தையழிந்து நின்றான். கிருஷ்ணன்

அடிகடிரு வுளத்தெண்ண மெம்மனோர்க
ளறியினிசை யலர்பலரிங் கறிவுறுமற்
கடியயர்வுற் றம்பதிகொண் டடைகவென்றுங்
காவலர்க்குக் கடனென்றுங் கசியக்கூறிக்
கொடியிடைவெங் களபமுலைக் கன்னிமானைக்
கூயணங்கே மெய்மையுறக் கொண்டகோலப்
படிவமுனிக் கிருபருவம் பணித்தவேவல்
பரிவுடனீ புரியென்று பணித்திட்டானே

[சுவாமிகள் திருவுள்ளத்திலிருக்கும் எண்ணத்தை எம் சுற்றத்தா ரறிவாராயின் ஒருப்படார்கள்; பலரறியாமல் புதுமணம் புரிந்து உமதூர் கொண்டுபோக வென்றும், அது காவலர்க்குக் கடனென்றும் மனதுருகக் கூறி, சுபத்திரையை விளித்து உண்மைத் தவக்கோலங்கொண்ட நோன்புடைய முனிவனுக்கு நான்குமாதம் அன்புடன் நீ யவனிட்ட குற்றேவல் செய்கவென்று பணித்தான்]

சுபத்திரையைத் துரியோதனனுக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களாதலால் அவள் உன்னை மணக்க இயையார்களென்றும், பிறரறியாமல் மணந்து செல்கவென்றும் கூறினர். அவ்வாறு செய்தல் நீதியன்று என்று நினையாதே; அது அரசநீதிக் கேற்றதென்று தெரிவிக்கக் காவலருக்குக் கடனென்றார். அரச நீதிக்கு அது எவ்வாறு ஏற்றதென்று நாம் முன்னே கூறியுள்ளோம். தன்னிடம் கேசவன் கொண்ட அன்பின் மிகுதி என்னேயென்று அருச்சுனன் மனமுருகிய குறிப்புத்தோன்றக் 'கசியச் சொன்னான்' என்றார் வில்லி.

சுபத்திரைக்கு யாதொரு ஐயமும் உண்டாகாதபடி 'மெய்யுறக் கொண்டகோலப் படிவமுனி' என்றார். ஆயினும் அதனை யுற்றுநோக்கில் அது பரிகச வார்த்தையாயிருக்கின்றது. நடிகர்களொழிந்த ஏனையோர்க்கு அது மெய்க்கோல மன்றென்று தெரிந்திருத்தலால் மெய்க்கோலமென்பது வஞ்சகப்புகழ்ச்சி யாகிறது. முனி என்னாது கோலங்கொண்ட முனி என்பதனாலேயே உண்மை முனி அன்று என்பதை வில்லி தெரிவித்தார்போலும். படிவமுனி என்பது நோன்புடைய முனியென்று பொருள்படினும் நல்ல வடிவத்தையுடைய முனி என்னும் பொருளும் தெரித்து நிற்றலால் சுபத்திரையை எச்சரித்துப் பரிகசித்ததுமாகிறது. ஆனதனாலோ அவள் பின்னால்,

நல்லி லக்கணம் பலவுடை யவயவ நலத்தால்
வில்லி லக்கணத் தழும்புடைக் கரங்களான்

இவன் ஆர்கொல் என்றயிர்த்தது?

அன்றிரவு எவ்வுயிரும் அடங்கியும், அருச்சுனன் மனதடங்கிலது. மழையினால் எத்தணலும் அவிந்தும் அருச்சுனன் உள்ளத்தில் நஞ்சுண்ட கண்ணாள் தருவிரக வெங்கன லவிந்திலது. இப்படிப் பலநாள் சென்றன. அவளும் இவனை யின்னானெனத் தெரிந்து கொண்டாள். இங்கு நிகழ்வன யாவரும் அறியாவண்ணம் ஏதோ ஒரு விழாவயர்வான் அனைவரையும் ஒரு தீவில் 'உறியில் வெண்டயி ருண்டவன்' கொண்டு சேர்த்தான். உறியிலுள்ளதைப் பிறரறியாவண்ணம் உண்ணும் சூழ்ச்சியுடையான் இச்சூழ்ச்சியையும் செய்து முடித்தான். பின்னொருநாள் இவ்விடம் தோன்றிக் கிருட்டினனும் அவ்விருவருக்கும் மணமுடித்து, அருச்சுனனை நோக்கி,

அன்ன மென்னடை யரிவையர் பொருட்டுநீ யின்ன
மென்ன வென்னமா தவவுருக் கொள்ளுதியென்றான்.

எம் சொந்தப் பிரசுரங்கள்.

சிறுவர் சிறுமியர்களுக்கு நல்ல தமிழில் எளிய நடையில் உயர்ந்த விஷயங்களைப்பற்றிஎழுதியுள்ள புத்தகங்களை வாங்கிக்கொடுத்து வாசிக்கச் செய்வது நலம். அதற்கு ஏற்ற புஸ்தகங்கள் இவை:—

கோபால் புதிய தமிழ் வாசகம்.

ஆ. மா. ஸ்ரீ இராகவன் B.A., L.T., எழுதியது.

	ரூ.	அ.	பை.
1-ஆம் வகுப்பு	0	2	6
2-ஆம் வகுப்பு	0	3	0
3-ஆம் வகுப்பு	0	4	0
4-ஆம் வகுப்பு	0	4	6
5-ஆம் வகுப்பு	0	6	0
ஆஞ்சனேயர், பண்டிதர் - ம. குப்புசாமி முதலியார் எழுதியது	0	5	0
சிறுமணிக் கதைகள், எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது	0	5	0
கம்பர் அல்லது கவியரசு, பண்டிதர் - அ. நா. கன்னையா எழுதியது	0	5	0
சிறுவர்களுக்கான இந்துதேச சரித்திரம், வி. ஜயராமய்யர் B.A., L.T., எழுதியது	0	5	0
ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம் எஸ். சுப்பிரமணிய அய்யர் B. A. எழுதியது	0	5	0
தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை, பண்டிதர்-கா. ரா. கோவிந்தராஜ முதலியார் எழுதியது	0	4	0
கோபால் வாய்ப்பாடு	0	1	0
புத்திமானே பலவான், (7-ம் பதிப்பு) ஏ. பரசுராமய்யர் எழுதியது.	0	12	0
கிருஷ்ணதேவராயர், கே. பி. சேஷாத்திரி ஐயங்கார் எழுதியது	0	8	0
பகீரதன், பண்டிதர் அ. நா. கன்னையா எழுதியது	0	6	0
பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன், பண்டிதர் - மே. வீ. வேணுகோபால பிள்ளை எழுதியது	0	6	0
சூரவாதித்த சோழன், பண்டிதர் - ஆர். எஸ். சாம்பசிவசர்மா எழுதியது	0	12	0
இலங்கேசன், Y. சீனுவாஸய்யர் எழுதியது	0	6	0
முசுகுந்தன், திரு. மாணிக்கவாசகர் எழுதியது (அச்சில்)	0	6	0

English publications.

English Selections for Higher Forms by P. S. Sivaswami Iyer. B.A., L.T.,	0	12	0
Nanda the Paraiah Saint by. C. S. Rangaswami Iyengar B.A., L.T.,	0	3	0
Fables from Mahabharata. by Paramasiva Iyer. B. A., L.T.,	0	3	0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

வேண்டும் புத்தகங்களுக்குக் கீழ்கண்டவிலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. G. PAUL & Co,
Publishars
Francis Joseph Street, Madras.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன அற்புத சஞ்சிகை வாசிப்பவ மனத்தைக் கவரத்தக்கதாய் இதுவரையில் தமிழில் வெளிவந்ததில்லை. ஜாதிமத வித்தியாசங்களின்றி யாவரையும் களிக்கச்செய்யும் வியாசங்கள் கொண்டது. பிரதி மாதமும் 56 பக்கங்களுடன் வெளிவரும்.

வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனம்.

10-ம் பதிப்பு] [வந்து விட்டது

ஆங்கில ஆசான்

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்துவாங்குங்கள்.

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன் பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம், வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சீமைகலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302,
தங்கசாலைவீதி, மதராஸ்.

Our Publications

Kamban's Kosala.

By T. N. Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville** and **Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணா 4.

உலக அதிசயம். விலை அணா 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணா 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணா 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

The Educational Publishing Co.,
Nungambakam, Madras.

வர்த்தமானம்

காலண்டர் வரவு,—காரைக்குடி இந்துமதாபிமான சங்கத்தார் தம்சுக்லவருஷத்திய காலண்டர்வரப்பெற்றோம். இதில் பாரதமாதா ராமகிருஷ்ண பரமஹம்ஸர் விவேகாநந்தர், டாகூர், ஸி. சுப்பிரமணிய பாரதியார் காந்திஅடிகள் முதலானோர்உருவப்படங்கள் போடப்பட்டுள்ளன. இந்துக்களுக்கு அவசியமான விடுமுறை நாட்கள், திருவிழாத் தினங்கள் ஒவ்வொரு மாதத்திலும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

***

சென்றசில நாளாகச் சென்னையில் தங்கியிருந்த பெங்களூர்,நால்வர்பவனம் திருவாளர் வி. எஸ். ஆறுமுக முதலியார் இந்நகரில் சில இடங்களில் கண்ணாடிப்படங்கள் வாயிலாக இராமாயணம் முதலிய கதைகளைக் காட்டிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். சென்ற திங்கட்கிழமை இரவு சிந்தாத்திரிப்பேட்டை ஆதிபுரீசுரர் கோயில் மண்டபத்தில் திருநீலகண்டர், கண்ணப்பர், நந்தனர், மூவர் சரித்திரத்தையும் பூதக்கண்ணாடிப் படங்கள் வாயிலாகக் காட்டினர். இவ்வாறு சமயாசாரியர்கள், நாயன்மார்கள் முதலியவர் சரித்திரங்களைச் சித்திரப் படங்களின் துணையாகக் காட்டுவதால், சிறுவர் சிறுமிகளுக்கும், பாமரருக்கும், பிறருக்கும் சமயப் பற்று எளிதில் ஏற்படுமென்று ஓர் அன்பர் எழுதுகிறார். தென்னிந்தியாவிலுள்ள பல பிரமுகர்கள் இவருடைய சிறந்த கருமத்தைப் பாராட்டிப் புகழுரைகள் வரைந்துளர்.

***

நீரியல்

சாண்டோ லெ.சோமசுந்தரஞ் செட்டியார் எழுதிய நீரியல் வருமாறு:—

பரிசுத்த நீரே பருகுதல் வேண்டும். ஊற்று மழை நீர் உண்ணத் தகுந்தது. மணம் ருசியற்றது மாசற்ற நீராம். காய்ச்சியாறியநீர் கரும்பினு மினிது. ஆற்றுப் புதுநீர் அன்றே நோய்தரும். உண்ணுமுன் சிறிதுநீர் உட்கொளல் முறைமை. சோடாக் குடியைத் தொலைப்பதே மேன்மை. மதுபானஞ்செயின் மதியழிந் திடுமே. தேநீர் காப்பியைத் தீண்டலுங் கொடிது. கொக்கோத் தானும் கூடாப்பொருளே. சிவக்கக் காய்ச்சிய பாலே சிறந்தது. நலிவுடைப் பாலகர் நடுநிசி விரும்பின் தெண்ணீர் அருத்தலே செய்யத்தக்கது. ஒன்பது மாதமும் குழந்தைகட் குணவு. தம்தாய்ப் பாலே தகுமென் றறிக. வெள்ளத்து நீரினில் விழுந்துழலாதே. அசுசி நீராயின் அருவருப் படைக. நல்ல தண்ணீரினை நாற்றஞ் செய்யேல். மலசலங் கழித்தல் கரைமீது அல்ல. நீர்கசியும் இடம் நிற்பதுந் தவறு. குடுவையிற் குடிநீர் கொள்ளுதல் வேண்டா. தெள்ளிய நீரைத் திறந்துவையாதே. கெட்ட எந்நீரையும் கிணற்றினுட் கொட்டேல். குடிநீர்க் குளத்தில் குளித்தல் கூடா. சாப்பாட்டு முடிவில் சாஸ்திநீ ரருந்தேல். சாப்பாட்டிற் கிடையே தாகமின் றேனும் இரண்டுமணிக்கோர்முறை இச்சையாப் பருகு. படுக்கு முன்னரும் விழித்த பின்னரும் குளிர்ந்த தண்ணீரினைக்குடித்தல் நலமே. நிர்மல நீரிலே நிதமும் நீராடு. குழந்தை வயோதிகர் கடும் உழைப்பாளி நோயர்க் கேற்றது வெந்நீர் முழுக்கே.

***

காங்கிரஸ் கட்சியில் உத்தியோகம் ஏற்கமுயற்சி:— வருகிற தேர்தலை ஒட்டிக் காங்கிரஸ் கட்சியாரில் சிலர் உத்தியோகம் ஏற்கவேண்டுமென்னும் அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர். சமீபத்தில் மதுரையில் கூடிய ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் காங்கிரஸ்காரர்கள் தங்கள் தனிப்பொறுப்பில் உத்தியோகம் ஏற்கவோ மறுக்கவோ செய்யலாம் என்ற முடிவு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

***

தேவகோட்டை:—சிவநேசத் திருக்கூட்டத்தார் இவ்வூருக்கு வந்திருந்தபோது நால்வர்படம் பவனி வந்தது. அதனுடன் சொ. பெ. பாடசாலை மாணவிகள் தேவாரம், திருப்புகழ், தேசியகீதம், இன்னிசை ததும்பும் மழலை நிறைந்த மொழிகளால் பாடிவந்தது போற்றத்தக்கது.

வடகலை இராமசுவாமி கோவில் 7, 8-ம் திருவிழா சமயம், சுன்னாகம். திருவாளர். குரா சி. மாணிக்கத் தியாகராஜ பண்டிதரவர்கள் "புனிதவதியார்" புராணத்தைப் பெரியபுராணச் செய்யுளுடன்உபந்நியாசம் செய்தார்கள். கூட்ட ஆரம்பத்திலும் முடிவிலும் சொ. பெ. பாடசாலை மாணவிகள் கதர்ப்பாட்டு, பாரதி பாட்டு, திருப்புகழ், தேவாரம் பாடினர்.

சொர்ணமூர்த்தி, பெண்பாடசாலையைப் பார்வையிட்ட சுன்னாகம். திருவாளர் குரா. சி, மாணிக்கத் தியாகராஜ பண்டிதர் அவர்கள் தம் அபிப்பிராயத்தை அடியில்கண்ட எழுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தத்தில் பாடித்தந்தார்கள். அதுவருமாறு:—

பொன்னுலகை நிகர்தேவ கோட்டையெனுநன்னகர்
    பொருந்துசீர்ச் சொர்ண மூர்த்திப்
புகழ்பெற்ற பெண்பாட சாலையுறு மாணவிகள்
    பொலிவு கண்டவ ணெய்திநான்
எந்நிலத் தவருமெச் சுறுவண்ண மிவர்கற்ற
    இணையில் கைத்தொழி லாதியா
எத்திறக் கல்வியையு மாராய்ச்சி செய்தளவி
    லிவர்கள்பே ரறிவின ரெனு
நன்னினைவு கொண்டனன் கற்பித்த வாசிரியர்
    நம்ம காத்தும காந்தியால் [பேர்
நவில்ராட்டினப் புலமைமு ருகனெனு மொப்பில்
    நண்ணு சொக்கையன் வன்மை [நடத்
யென்னுமெழில் கண்டுமகிழ் வுற்றனனிங் கிதை
    தேந்தலழ கப்ப வள்ளல்
எந்நாளும் வாழிமா ணவிகளா சிரியர்களு
    மினிது நீடுழி வாழி

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.

வி. பி. சார்ஜ் வேறு. **கலாநிலயம், வேப்பேரி, சென்னை.**

KALANILAYAM.
REG. NO. M, 2324.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam MADRAS.

189055

திரு கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எழுதிய
ஆராய்ச்சி நூல்கள்.

அப்பர் சுவாமிகள் சரித்திரம். ஆராய்ச்சியுடன் ராப்பர் ரூ. 0—14 கலிக்கா	1	4	0
திருஞானசம்பந்தர் சரித்திரம், ஆராய்ச்சியுடன் ராப்பர் ரூ. 1—4 கலிக்கா	1	10	0
சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் ராப்பர் ரூ. 1—2 கலிக்கா	1	8	0
மாணிக்கவாசகர் சரித்திரம், ஆராய்ச்சியுடன் ராப்பர் ரூ. 0—14 கலிக்கா	1	4	0
சந்தானுசாரியர் சரித்திரம், ஆராய்ச்சியுடன் ராப்பர் ரூ. 0—8 கலிக்கா	0	12	0
சேக்கிழார் சுவாமிகள் சரித்திரமும் பெரியபுராண ஆராய்ச்சியும். ராப்பர் ரூ. 1—0 கலிக்கா	1	9	0
முருகன் பெருமை	0	3	0
திருக்குறள் பொழிப்புரை. ராப்பர் 0 14 0 கலிக்கா ரூ. 1—4 ரெக்சைன்	3	0	0
முருகன் புகழ்மாலை (2வது பதிப்பு) முருகனைப்பற்றிய நூல்களும், முருகனடியார் வரலாறுகளு மடங்கியன.	3	0	0
குமாரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு அரும்பொருள் விளக்கத்துடன்	3	8	0
சைவசித்தாந்த உரைக்கொத்து 7 வசனநூல்க ளடங்கியது	2	0	0
நீதிநூற் கொத்து மூலமும் உரையும்	1	6	0
நானூற்பது மூலமும் உரையும்	1	8	0
நளவெண்பா உரையுடன்	1	4	0
நாலடியார் உரையுடன்	1	4	0
சித்தாந்த சாத்திரம் 14-ன் மூலம்	2	8	0

தேவாரம்.

திருஞான சம்பந்தர் தேவாரம் கலிக்கா	7	8	0
ஷை பட்டு அல்லது ரெக்சைன்	8	0	0
அப்பர் சுவாமிகள் தேவாரம் கலிக்கா	6	8	0
ஷை பட்டு அல்லது ரெக்சைன்	7	0	0
சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் கலிக்கா	3	0	0
ஷை பட்டு அல்லது ரெக்சைன்	3	8	0
நைடத மூலம்-ராப்பர் ரூ. 1—4 கலிக்கா	1	8	0

திருவிளையாடற் புராணம்.

மதுரைக் காண்டம் உரை	8	12	0
கூடற் காண்டம் உரை	7	8	0
திருவாலவாய்க் காண்டம் உரை (அச்சில்) 3 காண்டங்களுக்கும் மொத்த விலை	21	0	0

விரிவான புத்தகவிலைப்பட்டி இனும்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்., 6, பவளக்காரத் தெரு, சென்னை.

முருகன்—ஓர் உழவன்.

ஸ்ரீமான். K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் இயற்றியதும், இங்கிலாந்திலும் இந்தியாவிலும் சிறந்ததெனக் கொண்டாடப்படுவதுமான ஒரு நாவல் நூலிற்கு ஸ்ரீமதி. கிருஷ்ணகுமாரி செய்துள தமிழ் மொழி பெயர்ப்பு. நவநாகரிகத்தின் போலித்தன்மையை உடைத்துக்காட்டி உழவின் மேன்மையைப் பாராட்டுகின்ற இக்கதையின் அமைப்பும் நடையும் களிப்பைத் தரவல்லன.

விலை:—1 8 0 வி. பி. செலவு வேறு. கலா நிலயம், வேப்பேரி, சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)